85

அம்ருத தாரா

அல்லது

அதிசய சம்பவம்

வை.மு.கோதைநாயகி அம்மா

அட்டவணை

அதிகாரம்		பக்கம்
1.	இன்பத்தின் நிழலே துன்பத்தின் பிம்பம்	1
2.	ப்ரேமையின் சிகரம்—பேதையின் துயரம்	17
3.	காதலின் சிறப்பு—பேதையின் திகைப்பு	28
4.	நடுக்குறும் செய்தி—திடுக்கிடும் காட்சி	35
5.	மங்கை நல்லாளின் பொங்கிய இதயம்	45
6.	அருங்குண மணியின் அற்புதச் செய்கைகள்	55
7.	அம்ருத தாரையோ! ஆனந்த வெள்ளமோ!	74

பங்கு 1 நளினசேகரன் வீரவஸந்தா 3 வைரங்கள் படாடோபத்தின் பரிபவம் பிச்சைக்காரக் குடும்பம்	**இனாமாக ஒரு வருஷ சஞ்சிகையும் நாவல்களும் வேண்டுமோ ?**	**பங்கு 2** பரிமளகேசவன் உத்தமசீலன் கதம்பமாலை சுகந்தபுஷ்பம் கோபாலரத்னம் புத்தியே புதையல்
பங்கு 3 கௌரீமுகுந்தன் ஸாரமதி சோதனையின் கொடுமை	எத்தனை புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து முன்பண மனுப்புகிறீர்களோ, அத்தனாவது நம்பர் பங்கிலுள்ள புத்தகங்களில்	**பங்கு 4** தியாகக்கொடி நவநீதகிருஷ்ணன் சாமளநாதன் ருக்மிணீகாந்தன் மங்களபாரதி
பங்கு 5 வைதேகி பத்மசுந்தரன் ராதாமணி காதலின் கனி சாருலோசனா	**ஒன்று இனாம்.**	மூன்று புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து முன் பணம் அனுப்புவோருக்கு ஒரு வருஷ சஞ்சிகை இனாம்.

"ஜகன்மோகினி" ஆபீஸ்,

திருவல்லிக்கேணி.

அம்ருததாரா

இதுவரையில் நீங்கள்
படித்திராத அநுபவமும்,
நீதியும், அதியாச்சரியமும்,
திடுக்கிடும் சம்பவங்களும்,
கனவிலும் கருத முடியாத
அற்புதச் செய்கைகளும்
கூடிய நாவல்.

வை. மு. கோதைநாயகி அம்மாள்

எழுதிய

32-வது நாவல்

மூன்றாம் பதிப்பு

“ஜகன்மோகினி” ஆபீஸ்,
26, தேரடித் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை.

காபிரைட்] [விலை அணா 4.

2-OCT 1940
894.813

இந்நாவலின் சகல உரிமைகளும் ஆசிரியையுடையவை.

32nd " JMO " Publication.

"ஜகன்மோகினி" பிரஸ், திருவல்லிக்கேணி, சென்னை. (௫௪0௫)

ஸ்ரீ

அம்ருததாரா

அல்லது

அதிசய சம்பவம்

முதலதிகாரம்

இன்பத்தின் நிழலே துன்பத்தின் பிம்பம்

"உலகத்தில் மக்களை ஆனந்தமயமாக்கித் தன்வயப் படுத்தும் சக்தி இந்த அருமையான சங்கீதத்திற்குத்தான் இருக்கின்றதேயன்றி மற்ற எதற்குமில்லை என்பது பெரியாரின் சத்தியவாக்கியமல்லவா? இதை கூடியவரையில் ஒவ்வொருவரும் தமது அனுபவத்தில் நன்ருகக் கண்டநுபவித்திருக்கிருர்கள். இதை மறுக்க யாராலும் முடியாதென்பதுதான் என்னுடைய தீர்மான மான முடிவு. உபாத்தியாயரே! இத்தனை கீர்த்தனைகளுக்குள் எனக்கு இப்போது சொல்லிக் கொடுக்கும், "அப்ப ராமபக்தி எங்தோ" என்ற கீர்த்தனைதான் மிகவும் பிடித்திருக்கிறது. இம்மாதிரியான அர்த்தபாவத்துடன் உள்ள அருமையான கீர்த்தனைகளையே பொறுக்கி சொல்லிக் கொடுக்கும்படி அப்பா உங்களிடம் சொல்லச் சொன்ஞர். இன்று வேறு புதிய கிருதி எது ஆரம்பிக்கப்போகிறீர்கள்?" என்று குழலோ, யாழோ, கோகில த்வனியோ என்று ஐயுறும்படியான குரலில் ஓர் அழகே உருக்கொண்ட

ஆரணங்கு தன்னுடைய பாட்டுவாத்தியாரிடம் வெகு மரி யாதையாகக் கூறினுள்.

அம்ருத தாரை பொழிவது போன்ற இனிய குரலில் கோகிலம்போலக்கூறிவிட்டு தன்னுடைய உபாத்தியாயரின் பதிலை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த தாரா பாயை நோக்கி அவளுடைய பாட்டு வாத்தியார் மிகவும் வணக்கத்துடனும் சந்தோஷத்துடனும் பேசத் தொடங்கி, "அம்மா! தாராபாய்! உன் தந்தையின் விருப்பப்படிக்கே வெகு அழகான கிருதியை கற்றுத் தருகிறேன். மறி வேறே திக்கேவரைய்ய ராமா" என்ற ஷண்முகப்ரிய ராக கீர்த் தனத்தை ஆரம்பிக்க உத்தேசித்திருக்கிறேன் அதோ உன் பிதாவும் வருகிருர். அவரைக் கேட்டு செய்வோம்" என்ருர்.

அதே சமயம் சுமார் 55 வயது மதிக்கக்கூடியதும் பார்ப்பதற்கு வெகு முடுக்காயும், கண்டோர்கள் சற்று அஞ்சி கிடுகிடுக்கும்படியான தோற்றத்துடனும், அடர்ந்து நரைத்துக் கட்டைபோல விருக்கும் மீசையுடனும், சுமார் 7 அடி உயரத்திற்குக் குறையாமல், கட்டுமத்தான சரீரத் துடனும் கூடிய ஒருவர் அங்கு வந்து தன்னருமைப் புதல்வி யின் பக்கலில் உட்கார்ந்தார். அவளை தடவிக் கொடுத்த படியே "கண்ணே! தாரா! சங்கீதம் எப்படி இருக்கிறது?" என்று நகைத்துக்கொண்டே கேட்டார்.

தாரா :—அப்பா! சங்கீதம் வெகு அருமையானது. எனக்கு தெலுங்கும் கொஞ்சம்தெரிந்திருப்பதால் அர்த்தம் நன்ருகப் புரிகின்றது. பாடப்பாட என் மனத்திற்கே ஆனந்தமாக விருக்கிறது. கபி வாரிதி தாட்டுனு கலிகி ரோட்ட கட்டுனு, சபரி எங்கிலினிச்சுனு, சந்த்ரதருடு மேச்சுனு என்பது எத்தனை அருமையாகவிருக்கிறது பாருங்கள். அப்பா! தியாகராஜர் கீர்த்தனைகளில் முக்கியமான சில

வற்றைப் பாடம் செய்துவிட்டால் ராமாயணம் படிக்காம லேயே ராமாயணத்தின் ஸாரம் பூராவும் தெரிந்து கொள்ளலாமல்லவா?

சபாபதி:—கண்மணீ! உன்னுடைய சந்தோஷந்தான் என்னுடைய ஆனந்தம். நீ இத்தனை புத்திசாலியாக விஷ யங்களைத் தெரிந்துகொள்வதைப் பற்றி என்னுள்ளம் பூரிக்கின்றது. உன்னுடைய புத்தியும் சூக்ஷ்ம சக்தியும் நாளைக்கு நாள் விருத்தியாகிக்கொண்டே வருவதை நான் கண்டு களிக்கின்றேன். தாரா! உனக்கு ஆரம்பத்திற்கு இந்த பாடகர் போதுமென்று இதுவரை வைத்தேன். இப் போது உனது ஞானம் பெருகிக்கொண்டு வருவதால் இன் னும் வேறு பெரிய வித்வானை நியமிக்கட்டுமா அல்லது இவரே போதுமா! உன்னபிப்பிராயத்தைச் சொல்லு.

தாரா:—அப்பா! இவரே போதும். இன்னும் பெரிய வித்வான்களிடம் கற்றுக் கொள்ளக்கூடிய யோக்யதை எனக்கு இன்னும் வரவில்லை என்று நினைக்கிறேன். மேலும் இவர் நமக்கு இத்தனை வருஷமாகப் பழகிவிட்டார். இவர் மகா யோக்யர், நல்லவர் என்பது நமக்குத் தெரிந்துவிட் டது. இனி வேறு ஆள் வைத்தால் அவர் எப்படி இருப் பாரோ? அவருடைய சங்கீத வழி எனக்குப் பிடிபடுவ தற்கு எத்தனை நாளாகுமோ! ஆகையால் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று தோன்றுகின்றது.

சபாபதி:—செல்வீ! உன்னிஷ்டப்படியே செய் யம்மா! நமக்கு இன்னும் பெரிய வித்வான் வைத்து சொல் லிக் கொடுக்கவில்லை என்று நீ எங்கே கவலைப்படுகிறயோ வென்றுதான் நான் முன்னெச்சரிக்கையாக வாத்தியாரின் எதிரிலேயே கேட்டேன். தாரா! நாளைய வெள்ளிக்கிழமை யன்று உன்னுடைய தாயாரின் திதி தினம் வருகிறது.

சென்றவாண்டு செய்ததுபோல உன் விருப்பப்படியே நீ உன் மன மகிழவும், உன் தாயாரின் ஆத்மா களிக்கவும் சிறப்பாகச் செய்யம்மா. இதோ அதற்கென ப்ரத்யேகமாக ரூ. 100. வைத்துக்கொள்ளு. நான் வெளியில் சென்று வருகிறேன்" என்று கூறிவிட்டுப் போனர்.

தாராபாயிக்குத் தன் தாயாரின் திதி தினம் என்று கூறியதைக் கேட்டதும் ஒரு விதமான விசனம் உண்டாகியது. "என்னைப்போல தாயாரைக் கண்ணுல் பாராமலேயே பறிகொடுத்த பாவி உலகத்தில் யாராவது இருப்பார்களா? எனக்கு எத்தனை வயது ஆகிறதோ அத்தனை வருடங்கள் என் தாயார் இறந்தும் ஆய்விட்ட தென்றுல் என்னதிர்ஷ்டத்தைக் கூறவேண்டுமா!.... அடாடா!.... நாளை வரப்போகும் திதி 16-வது திதியல்லவா!... உம். தாயார் வயிற்றில் பிறந்ததன் பலன் திதி செய்து கொண்டாடிக் களிப்பது தான் போலும்" என்று எண்ணும்போது தன்னை யறியாத துக்கம் வந்ததால் தலை குனிந்தபடியே உட்கார்ந்தாள்.

உபாத்தியாயர் புதிய பாட்டை ஸ்வரத்துடன் எழுதிவிட்டு வழக்கம்போல "அம்மா! புதிய பாட்டு ஆரம்பிக்கலாமா?" என்று கேட்டபடி நிமிர்ந்து பார்த்தார். தாராவின் முகம் பூர்ண சந்திரனைப்போல பிரகாசித்துக் கொண்டிருந்ததற்கு மாருகத் தலை கவிழ்ந்து விசனத்தால் வாடிப் போய்விட்டதைக் கண்டு அவர் மனமும் சற்று கவலையுற்றது. தான் என்ன பேசுவது என்று தெரியாது மவுனமாக வீற்றிருந்தார்.

தாரா அன்று அதற்குமேல் பாடம் சொல்லிக்கொள்ள பிரியப்படாதவளாய் தன் உபாத்தியாயரை நோக்கி, "ஐயா! இப் புதிய பாடத்தை நாளையதினம் ஆரம்பிக்கலாம். இன்று என் மனது சரி இல்லை. ஏதோ செய்கிறது.

ஆகையினுல் இம்மட்டுடன் நிறுத்திவிடுகிறேன்" என்று வருத்தத்தோடு கூறினுள்.

உபாத்தி :—அம்மா ! உன்னிஷ்டப்படியே செய். நான் அதிகப்பிரஸங்கியாகக் கேட்பதாக நினைக்கவேண்டாம். உனக்கு திடீரென்று விசனத்தைத் தரும்படியாக என்ன நேர்ந்தது என்பதை யறிய அதிக ஆவலாக இருக்கிறது. என்னிடம் ஏதேனும் நானறியாதவாறு குற்றம் நிகழ்ந்ததா என்ற பயத்தினுல் கேட்கிறேன். தயவு செய்து கூறுவாய்.

தாரா:—ஐயா ! இதென்ன பயித்தியக்கார எண்ணம் ? உங்களிடம் குற்றமாவது குறையாவது ? என் திடீரென்று இவ்விதம் தோன்றவேண்டும். அப்படிக் கொன்றுமில்லை. ஒரு காலத்திலும் அப்படிக்கெல்லாம் நேராது. என்னுடைய அதிர்ஷ்டஹீனப் பிறவியை எண்ணினேன். மனங் கலங்கி விட்டது. என் தாயாருக்கு திதி என்றதைக் கேட்டதும் ஏதோ வருத்தம் உண்டாகிவிட்டது. உலகத்தில் ஒரு உயிர் உண்டாக வேண்டுமாயின் அது ஓர் தாயின்மூலந்தான் உண்டாகி இருக்கவேண்டும் என்று தெரிந்துகொண்டு தாயார் வயிற்றில் பிறந்ததாக எண்ணவேண்டி என் விதி யமைந்ததே யன்றி தாயாரைக் காணும் பாக்கியம் பெருது திதி செய்யும் பாபத்தை மட்டும் செய்து பிறந்தோம் பார்த் தாயா என்ற பரமவேதனை யுண்டாகிவிட்டது. பெற்ற அன்னையின் முகத்தைப் படத்தில் பார்த்து இவள்தான் அன்னை என்று தெரிந்துகொள்ளும் மகா பாவி என்னைப் போல உலகத்தில் யாராவது இருப்பார்களா ? அதை நினைக்க என்னை மீறி எனக்குத் துயரம் உண்டாகிறது. வேறு ஒன்றுமில்லை" என்று கண்ணீர் பெருகியவாறே கூறினுள்.

வாத்தியார் :—அம்மா ! உன்னைப்போல உலகத்தில் இருப்பார்களாவென்று சொல்லுகிருயே ! அதுமட்டும்

சரியில்லை. உன்னைவிட மோசமாகவும் பரிதாபகரமாகவும் உலகத்தில் எத்தனையோ பெயர்கள் இருக்கிறார்கள். அந்த வகையில் நானும் ஓர் பாவி என்று கூறலாம். நீயாவது, உன் தாயின் ஆயுள் முடிந்து காலமாகியதால் பறிகொடுத்தாய். அம்மா! என் சரிதையைக் கேட்டால் நீ இன்னும் நடுங்குவாய்—என்று கூறி விசனித்தபடியே பேச்சை நிறுத்திவிட்டார்.

தாரா :—உபாத்தியாயரே! உங்கள் சரிதையும் இப்படி பரிதாபகரமானதா! அப்படியாயின் அதை தயவு செய்து சொல்லுங்கள். அதைக் கேட்டு நான் சற்று ஆறுதலடைவேன். நீங்கள் தயங்காமல் கூறுங்கள்—என்று ஆவலே வடிவாகக் கேட்டாள்.

உபாத்தியாயர் :—வருத்தமறியாத சிறுமியாகிய உன் மனத்தை என் வருத்தமறியச் செய்யவேண்டுமென்று நான் இதுகாறும் மூச்சு விடவில்லை. தாரா! நான் பிறந்ததொரு தேசம்; வளர்ந்ததொரு தேசம், வயிற்றுப் பிழைப்புப் பாட்டுபாடித் தாளம் போட்டுப் பிழைப்பதொரு தேசமாகிவிட்டது. இன்னும் எத்தனை தேசங்கள் மாறுமோதெரியாது. எங்களுடைய பூர்வீகமான ஊர் முத்துக்கோட்டை என்ற ஊராகும். அங்கு என் தகப்பனார் ஓர் உத்யோகத்திலிருந்து வந்தார். எனது பாட்டனாருக்கு என் தகப்பனார் ஒரே ஒரு குமாரர்தான். அவருக்கு பூர்வார்ஜிதம் அதிகம்: ரொக்கமாகவே வைத்துக்கொண்டு லேவாதேவி செய்துவந்தாராம். அவருடைய பெயரைக் கேட்டாலே அவ்வூராருக்கு மிகுந்த பயபக்தி விச்வாசம் உண்டாகுமாம். என் தகப்பனாருக்குச் சிறு பிராயத்திலேயே அவருடைய தாயார் காலமாகிவிட்டாராம். எனது பாட்டனார் எத்தனையோ செல்வாக்காக என் பிதாவை வளர்த்து

வந்தாராம். அந்த கிராமத்தில் அதிக வீடு வாசல்கள் கிடையாதாம். சில குடும்பங்களே இருந்தனவாம். என் பிதாவுக்கு விவாகமாகியதும் இரண்டு குழந்தைகள் பிறந்ததாம்; மூன்ருவதாக என் தாயார் என்னைக் கர்ப்பமாக விருந்தாளாம்.

என் பாட்டனுருக்கு தேக அசுக முண்டாகி, அந்திம காலத்தின் அறிகுறிகள் ஏற்பட்டு விட்டனவாம். அதனுல் அவர் யாரிடம் பணங்கள் கொடுத்திருந்தாரோ அவர்களுக்கெல்லாம் நோட்டீஸ் விட்டுப் பெரும் பாகத்தை வசூல் செய்துவிட்டாராம். அவைகள் பாதிக்கு மேல் பணமாயும் மீதி நகைகளாயும் கிடைத்தனவாம். இந்நிலைமையில் கிழவரின் காலமும் ஆய்விட்டதாம்.

இந்த பண விஷயமான உளவை எப்படியோ ஒரு பெருங் கொள்ளைக் கூட்டத்தினர் தெரிந்துகொண்டு ஒரு தினம் இரவு திடீரென்று அச் சிறிய ஊரையே வளைத்துக் கொண்டு வீடுகளில் புகுந்து விட்டார்களாம். ஊரிலுள்ள மற்ற ஜனங்கள் கூச்சலிட்டுக் கத்தி ஓட முடியாதபடிக்கு தீவட்டியால் அடித்தும், சூடு போட்டும், கூரையைக் கொளுத்தியும் ஹதம் செய்யத் தொடங்கினுர்களாம்.

பின்னும் சிலர் எங்கள் வீட்டில் புகுந்து த்வம்ஸம் செய்து "இரும்புப் பெட்டியின் சாவியை முன்னே வைக்கிருயா! இல்லையா?" என்று என் பிதாவை வளைத்துக் கொண்டார்களாம். என் பிதா கோபம் மேலிட்டு அவர்களுக்குச் சரியாக சண்டை போட எண்ணி ஒரு தடியை எடுத்துக் கொண்டாராம். இதைக் கண்ட கள்ளர்கள் தீவற்றியினுல் அவரையே கொளுத்திவிட்டு சாவியைப் பிடிங்கிக்கொண்டு அத்தனை பொருள்களையும் எடுத்துக் கொண்டு என் தாயாரின் உடம்பில் இருக்கும் நகைகளைப்

பறிக்க வந்தார்களாம்.

கர்ப்பிணியான என் தாயார் இந்த அமர்க்களத்தைக் கண்டு குலை நடுக்கங் கொண்டு தன்னிரு குழந்தைகளையும் தூக்கிக்கொண்டு வீதிப் பக்கம் ஓட முயற்சித்தாளாம்.

இதைக் கண்ட அம் முரடர்கள் கையிலிருந்த குழந்தைகளைப் பிடுங்கி ஒரு கல்லை விட்டெறிவதுபோல எறிந்துவிட்டு என் தாயின்மீது கையை வைக்கப்போனார்கள். அவர்கள் தன்னைத் தீண்டி என்ன செய்வார்களோவென்று என் தாயார் பயந்து கதறியவாறு உடம்பிலிருந்த எல்லா நகைகளையும் கழட்டி வைத்துவிட்டு "இனியாவது விட்டுவிடுங்களேன்" என்று கெஞ்சினாளாம். அப்போதும் என் தந்தையின் கதியை என் தாயார் அறியமாட்டாளாம்.

என் தந்தையைத் தேடி "நாதா! நாதா!" வென்று அலைந்தாளாம். இதற்குள் கொள்ளைக் கூட்டத்தினர்களின் வேலை தீர்ந்துவிட்டதாம். அகப்பட்ட எல்லாவற்றையும் சுற்றிக்கொண்டு ஊரையே ஒரு அல்லகல்லோலம் செய்துவிட்டு ஓடிவிட்டார்களாம். எமன் புகுந்து சென்றதுபோல அப் பாதகர்கள் சென்றதும் ஊரும், ஊரிலுள்ள மக்களும் என்ன கதியை அடைந்து எப்படித் தவித்திருப்பார்கள் என்பதைக் கூறவும் முடியுமா?

சொத்துக்களைப் பறி கொடுத்ததோடு மக்களைப் பறி கொடுத்தோரும், வீட்டைத் தீவட்டிக்கு இரையாக்கித் தவிப்போரும், அடிபட்டும் அங்கஹீனமாகியும் அவதிப்படுவோரும் கொஞ்சநஞ்சமல்லவாம். என் தாயார் பயத்தினால் நடுக்கலுற்றுக் கலங்கிப்போய் பித்துப் பிடித்தவள் போலச் சென்று பார்க்கையில் என் பிதா எரிந்து கொத்துயிராகிவிட்டாராம். என் தாயாரின் கையிலிருந்து பிடுங்கி எறிந்த குழந்தைகள் ஒரு கல்லில் மோதுண்டு இறந்து

விட்டனவாம்.

அந்தோ! பரிதாபம்! கண்ருவி. சொல்லத் திறமற்ற இந்த காட்சியைக் கண்டதும் என் தாயார் மூர்ச்சையடைந்து கீழே விழுந்துவிட்டாளாம். பிறகு அவளுக்கு பிரக்ஞை வந்து கண் திறந்து பார்க்கையில் என்னைப் பிரஸவித்து இரண்டு நாட்களாகி இருந்ததையும், தான் ஓர் ஆஸ்பத்திரியில் கடுமையான நோயினுல் அவஸ்தைப்படுவதையும் அறிந்துகொண்டாள். மெல்ல தெளிவு பெற்று தன் வீட்டைப்பற்றி விசாரிக்கையில் என் பிதாவும் அன்றே இரணஜன்னி கண்டு இறந்துவிட்டதாயும், வீட்டிலும் தீப்பிடித்து சில பாகங்கள் எரிந்துவிட்டதாயும், ஊரே நாசமாகிப் பாழடைந்துவிட்டதாயும் சில நாட்கள் சென்றபிறகு தெரிந்துகொண்டாளாம்.

ஐயோ பாவம்! நெருப்பின்மீது புழுகெனத் துடித்தாளாம். என்னைப் பார்க்கவும் வெறுப்புற்று என்மீது கடுங்கோபங்கொண்டு திட்டினுளாம். என்னுடைய துரதிருஷ்டத்தினுல்தான் இம்மாதிரி குடியே முழுகிவிட்டதாக எண்ணி எண்ணி புண்ணுகித் தவித்தாளாம். பிறகு எப்படியோ சிகிச்சையில் குணம் பெற்று சுமார் ஒரு மாதத்தில் பிழைத்துக்கொண்டாளாம்.

தாரா! சொத்துக்கள், வீடுவாசல் முதலியன எது போய்விடினும் பிச்சை வாங்கி உண்டேனும், கூலி வேலை செய்தேனும் பிழைத்துக் கொள்ளலாம். மேற்குறித்த சகலமும் போய் மக்கள், புருஷன் எல்லாம்போய் ஒரு சிறு குழந்தையுடன் மூண்டிக் கட்டையாக நின்றுவிட்ட அந்தம்மாளின் நிலைமை எப்படித்தானிருக்கும்? ‘நானும் இக் குழந்தையும் மட்டும் ஏன் பிழைக்கவேண்டும். அவர்களோடு இறந்திருந்தால் எத்தனை நலமாகவிருக்கும்’ என்று சதா கண்

ணீர்விட்டுக் கதறிக்கொண்டே இருந்தாளாம்.

அந்த ஆஸ்பத்திரியிலிருந்த ஒரு நோயாளியம்மாள் இதைக் கவனித்து மிகவும் வருத்தமுற்று என் தாயாருக்கு தேறுதல்கள் கூறி எத்தனையோ இடங்களில் இம்மாதிரி நேர்ந்துள்ள கதைகளை எல்லாம் சொல்லி அவள் துயரத்தைச் சற்று ஆற்றுவாளாம். பிறகு அந்த அம்மாள் உடம்பு குணமாகி வீட்டிற்குச் சென்றார்களாம்.

அந்த அம்மாளுக்கு குழந்தைகளே இல்லையாம். அதற்காகச் சுற்றாத கோயிலில்லையாம். செய்யாத பிரார்த்தனைகள் இல்லையாம். ஒன்றும் பயனில்லையாம். அனாதைப் பரதேசியாகிய என்னைக் கண்டு அவர்களுக்கு என்மீது சிறிது ஆசையும் பச்சாத்தாபமும் உண்டாகியதாம். அதனால் என்னை யவர்கள் வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு சென்றார்களாம். அந்தம்மாளின் புருஷர் பெரிய பாடகர். அவர்கள் பெரிய குபேரர்களல்ல. இந்தப் பாட்டும் ஊரிலிருக்கும் கொஞ்சம் நிலமும் தான் ஜீவனம்; ஆகையினால் அவர்கள் என்னையும் என் தாயாரையும் ஆதரிக்க சிரமமாகவிருந்தது.

என் தாயாருக்கு அவ்வூரிலேயே ஒரு வீட்டில் சமையல் செய்யும் வேலையைப் பார்த்துக் கொடுத்தார்களாம். என்னை மட்டும் தங்கள் செலவிலேயே வளர்த்துவந்தார்களாம். என் தாயார் விதியை எண்ணிப் புலம்பியபடியே வேலை செய்து வந்தாளாம். எந்தப் பெரியாரின் புண்ணிய வசத்தினாலோ என் தாயார்வேலைசெய்துகொண்டிருந்த வீட்டிற்கு ஓர் பெரியார் வந்தாராம். அவர் என் தாயாரின் சரிதையைக் கேள்வியுற்றுக் கண்ணீர் விட்டதோடு "நீங்கள் இந்த இடத்தில் இப்படி கஷ்டப்படவேண்டாம். என்னோடு வாருங்கள். எங்கள் ஊரில் ஏழைப்பெண்களின் அனாதை நிலையம் ஒன்று இருக்கிறது. அதில் தலைவியாக இருக்கும்படி

ஏற்பாடு செய்கிறேன்" என்று கூறினாராம்.

என் தாயாருக்கும் அது மிகவும் சம்மதமாகத் தோன்றி யதால் இசைந்துவிட்டார்களாம். என்னை அந்த பாடகர்கள் கொடுக்க வருந்தினார்களாம். என் தாயாருக்கும் என்னை எடுத்துச் செல்ல மனமில்லையாம். எங்கேயாவது பிச்சை யாக வளரட்டும் என்று வெறுப்புடன் விட்டுவிட்டுப் போய் விட்டாளாம். சில மாதத்திற்கொருமுறை பாடகர் என்னைக் கொண்டு என் தாயாருக்குக் காட்டிவிட்டு வருவாராம்.

இப்படியே பல வருடங்கள் கழிந்தனவாம். எனக்குச் சிறு பிராயம் முதல் அந்த பாடகர் சங்கீதத்தை நன்றாக ஊட்டினார். அந்த மகானுபாவனுடைய அன்னமும் வித்தை யுந்தான் என்னை இம்மட்டும் கொண்டுவந்தன. எனக்குத் தந்தையாயும் குருவாயும் விளங்கிய மகானுபாவருக்கு மிக வும் தள்ளாத வயதாகிவிட்டது. அவரை ஓய்வு எடுத்துக் கொள்ளும்படிச் செய்துவிட்டு அவர் பாடம் சொல்லிக் கொடுத்த இடங்களை எல்லாம் நான் பிடித்துக்கொண்டேன்.

எனக்குக் கிடைக்கும் பொருளை அப்படியே அவர்க ளிடமே கொடுத்துவந்தேன். சமீபத்தில்தான் அந்தம்மாள் காலமாகிவிட்டாள். கிழவர் மட்டும் இருக்கிறார். நான் ப்ரதி தினமும் காலையில் எழுந்தவுடன் அவருக்கு ஸ்னானம் பூஜை முதலியன செய்ய வசதி செய்துப் பிறகு காலையாகாரம் தயார் செய்து கொடுத்துவிட்டுக் கிளம்பி இரண்டு மூன்று வீடுகளில் பாடம் சொல்லிக் கொடுத்துவிட்டு வீட்டிற்குச் சென்று சமையல் செய்து ஸ்வாமிக்கு நிவேதனம் செய்து பெரியவருக்குப் பரிமாறிய பின் நான் சாப்பிட்டுச் சிறிது நேரம் இளைப்பாறிவிட்டு மூன்று மணிக்குக் கிழவருக்கு இடைவேளை ஆகாரம் கொடுத்துவிட்டு மீண்டும் பாடத் திற்குச் செல்வேன். பாக்கி வீடுகளில் சொல்லிவிட்டு

வீட்டிற்குச் செல்லும்போது ஏழு மணியாகிவிடும். அதன் பிறகு சமையல் செய்து பெரியவருக்குப் போட்டு நானும் புசித்துவிட்டு அவரோடு வெகுநேரம் பேசிக்கொண்டிருப்பேன். இப்படியே என் காலம் நடைபெற்றுவருகிறது.

என் தாயாரை இங்கு வந்து விடும்படிப் பலதரம் நானும் பெரியவரும் அழைத்தோம். அவர்கள் ஒரே பிடிவாதமாக வர மறுத்துவிட்டார்கள். தான் அந்த ஆசிரமத்திலிருந்தே காலத்தைக் கடத்துவதில்தான் தனக்கு ப்ரியம் என்று கூறிவிட்டார்கள். ஆதலால் அவர்களுக்கு விரோதமாக நடக்க நான் விரும்பாததால் விட்டுவிட்டேன். ஒரு காலத்தில் வெகு மேன்மையாயும், மற்ெருரு காலத்தில் அனுதையாயும், இக்காலத்தில் இந்நிலைமையிலும் எங்களை எங்கள் விதியமைத்திருக்கிறது. இன்னும் என்னென்ன கோலத்திற்காளாக்கப்போகிறதோ தெரியாது. எனது சரிதை இம்மட்டுடன் முடிந்தது. போதுமா? அம்மா! உனது சரிதையைவிட இது எத்தகைய பரிதாபகரமானதும் கோரமானதும் பார்த்தாயா! உலகத்தில் இதைவிட இன்னும் கேவலமான துயரங்கள் எத்தனை இடங்களில் இருக்கின்றனவோ யார் கண்டது? எல்லாம் ஈசனின் சோதனை" என்று ஒரு கதையைப்போலக் கூறி முடித்தான். அவனது அழகிய பரந்த விசாலமான கண்களில் சலசலவென்று நீர்த்துளிகள் உதிர்ந்து கன்னத்தில் வழிந்தன.

இதைக் கண்ட தாராவுக்கு மனம் தாங்காது இளகி துக்கம் மிகுந்துவிட்டது. அவள் கண்களும் நீர்மாரி பொழிந்தன. அவள் வாய் திறந்து பேசவேமாட்டாது திகைத்தாள். பாட்டு வாத்தியார் தன்னைத்தான் தேற்றிக் கொண்டு "அம்மா! நீ இப்படி விசனிப்பாய் என்றுதான் நான் இதுகாறும் என் விஷயத்தைச் சொல்லாமலேயே இருந்தேன்.

இதற்கெல்லாம் விசனித்து எம்மட்டும் முடியும்? நாங்கள் இவைகளை நினைப்பதே இல்லை. கல்லாய்ப் போய்விட்டோம். என் தாயாரின் மனம் முறிந்து துறவியிலும் துறவியாக ஆகி விட்டாள். நான் எங்கேயாவது பிழைத்திருந்தால் போதும் என்ற நோக்கம் ஒன்றுதான் அவள் மனத்திலிருக்கிறது. அதைத் தவிர மற்ற ஆவலெல்லாம் மடிந்துவிட்டது...உம்... விசனிக்காதே யம்மா!...என்று தேற்றினுன்.

தாரா :—உபாத்தியாயரே! நீர் சொல்லிய உமது சரி தையைக் கேட்கும்போது எனக்கு ஏதோ கதை படிப்பது போலவிருந்ததேயன்றி இத்தகைய கஷ்டமும் நேருமா, மனிதரால் சகிக்க முடியுமா என்று தோன்றி வருத்தியது. இதைக் கேட்ட பிறகு என்னுடைய விசனம் கேவலம் ஓர் பஞ்சுபோன்றதாகத் தோன்றிவிட்டது. உலகத்தில் தாயார் இறப்பதும் குழந்தைகள் பரதேசியாவதும் சகஜம். அம் மாதிரியான சம்பவங்கள் ஆயிரக்கணக்கான இடங்களில் இருக்கும். உங்களுடைய சரித்திரத்தைப்போல எங்குமே இருக்காது...உம். உங்கள் தாயாரை நீங்களாவது அடிக் கடி சென்று பார்ப்பதில்லையா?

உபாத்தி :—எனக்கு என்னை வளர்த்த பிதாவை விட்டு விட்டுப் போகமுடியவில்லை. சுமார் ஒரு வருடத் திற்குக் கிட்டவாகிவிட்டது நான் என் தாயாரைப் பார்த்து. பெற்றவர்களைவிடப் பெரிதோர் ப்ரேமையுடன் வளர்த்து எனக்கு சங்கீதத்தைக் கற்றுக்கொடுத்துப் பிற்காலத்திற்கு வேண்டிய ஆதாரமும் ஊட்டி, என்னைக் காக்கும் பெரிய வருக்குப் பணிவிடை செய்து திருப்தியடைவதுதான் எனது ஜென்மாவின் முதற் கருமமாகும். இதைவிட புனிதமான சேவை எனக்கு வேறு கிடையாதென்பதே என்னுடைய மனப்பூர்வமான எண்ணம்—என்று பேசிக்

கொண்டே மணியைப் பார்த்தார்.

மணி மாலை ஆறரையாகிவிட்டது கண்டு அலறிக் கொண்டே எழுந்து "தாராபாய்! நான் ஏதேதோ பேசிக் கொண்டிருந்ததால் நேரம் அதிகமாக ஆகிவிட்டது. இங் கிருந்து நேரே அடுத்த தெருவு அம்பலவாணன் வீட்டில் சொல்லிக்கொடுத்துவிட்டு வீட்டிற்குப் போகவேண்டும். அந்த வீட்டில் மட்டுந்தான் சிறிது தொல்லை. அந்தப் பெண் நன்ருக புத்திசாலியாகப் பாடுகிருள். சொன்னதை உடனே கிரகித்துக்கொண்டு வெகு அழகாகப் பாடுகிருளே என்ற ஓர் பிரியத்தினுல் மட்டும் அங்கு செல்லுகிறேனே யன்றி மற்றபடி எனக்குப் பிடிப்பே இல்லை.

அந்த பெண்ணின் தந்தை தனவந்தர். ஸ்ரீமான் என்கிற பெயர் இருந்தபோதிலும் அவரைப்போன்ற லோபி, அல்பர் யாருமில்லை எனலாம். நான் பாடத்திற்குச் செல்ல சிறிது நேரம் பிடித்துவிட்டாலோ, அல்லது ஒரு நாள் தவறி விட்டாலோ மிகவும் அல்பத்தனமாயும், எடுத்துக் கவிழ்த்த மாதிரியாயும் பேசிவிடுவார். அந்த செய்கைதான் எனக்குப் பிடிப்பதில்லை" என்று சொல்லிக்கொண்டிருக்கையில் அம் பலவாணனின் குமாரன் அங்கு வந்து வெகு அட்டகாஸமும் அதிகார தொனியும் ஜொலிக்க "ஓய்! நீர் ஒவ்வொரு தினமும் இவ்விதம் வம்பளந்து ஊர் திரிந்துவிட்டு வந்தால் எங்கப்பாவுக்குப் பிடிக்கவில்லை. உங்கள் தாமதத்தினுல் எங்கள் வேலை எல்லாம் கெட்டுப்போய்விடுகிறது. பூனை கண் மூடிவிட்டால் பூலோகம் இருண்டுவிட்டதாக எண்ணி விட்டீரா! நீர்தான் மகாவித்வானே! உம்மை விட்டால் கதி இல்லை என்று நினைத்துவிட்டீரா?

பேஷ்! பேஷ்! அபஸ்வர சங்கீதம் பாடுவதற்கே இத்தனை கர்வம் இருந்தால் உயர்ந்த சங்கீதம் பாடிவிட்டால்

எத்தனை தலைத் திமிர் இருக்குமோ தெரியாது. இன்றோடு உம்முடைய சங்கீதம் போதுமாம். இனிமேல் நீர் வர வேண்டாமாம். உம்மை எங்க வீட்டிலும் பக்கத்து வீட்டிலும் நிறுத்தியாகிவிட்டதென்று அப்பா சொல்லச் சொன்னாராம்" என்று தடதடவென்று ஆத்திரத்துடன் கூறிவிட்டுப் போய்விட்டான்.

இந்த அல்பத்தனமும் அதிகப் பிரஸங்கமுமான வார்த்தையைக் கேட்டதும் உபாத்தியாயரான அம்ருதலிங்கத்திற்கு மிகவும் அவமானமும் விசனமும் உண்டாகிவிட்டன. இரண்டு பாடங்களும் நின்று மாதம் 10 ரூபாய் போய்விட்ட துக்கத்துடன் அந்தப் பையன் அலக்ஷியமாகப் பேசிச் சென்ற வார்த்தைகள் மனதில் சுறுக்கென்று தைத்தன.

விசனமும் வெறுப்பும் ஒன்று கூடி வதைத்தன. குனிந்த தலையை நிமிர்த்தவில்லை. தனக்கு வரும் சொல்ப வருமானத்தில் திடீரென்று 10 ரூபாய் நின்றுவிட்டதால் குடும்ப போஷணைக்கு மிகவும் கஷ்டமாகிவிடுமே என்ற ஏக்கமும் ஒன்றுகூடி கண்ணில் நீரும் சில துளிகள் உதிர்ந்தன. இவனுடைய நிலையைக் கண்டு தாராவின் மனமும் கலங்கியது. அவளுடைய தாமரைமலர்போன்ற கண்ணிலும் நீர்த்துளிகள் உதிர்ந்தன. இருவரும் பேசாமடந்தைகள் போல பூமாதேவியை நோக்கியவாறே நின்றார்கள்.

பொன்விழா நாவல்
ஆத்மசக்தி
இரண்டாம் பதிப்பு
ரூ. 1-4.

அதிகாரம்—2

ப்ரேமையின் சிகரம்—பேதையின் துயரம்

நாற்புறமும் தாழ்வாரங்களும் மத்தியில் ப்ரமாண்டமான முற்றமும் அடங்கிய சுமார் 7-8 அறைகளும் அவ்வறைகளில் ஒவ்வொன்றில் குறைந்தது அரை டஜன் மனிதர்கள் அடைபட்டுக் கிடப்பதும், காச்சு மூச்சு என்று கத்தும் குரலும் காதை செவிடுபடச் செய்கின்றன.

தாழ்வாரத்தில் ஒரு அறையிலுள்ள நார்க்கட்டிலில் மிகவும் வயது முதிர்ந்து, தேகம் தளர்ந்து, மெலிந்து போன கிழவர் ஒருவர் மட்டும் தனியே படுத்திருந்தார். மழை பெய்தால் அவ்வறைகளில் வருணபகவான் எவருடைய தாக்ஷண்யமுமின்றி தாராளமாக உள் நுழைந்து தன்னரசு புரிவான். அதேபோன்று சூரிய சந்திராதிகளும் குசாலாக உலாவுவார்கள். தேவதைகள் சஞ்சரிக்கும் பெரிய மகிமை பொருந்திய வாசஸ்தானமென்றே அந்த ஏழை மக்கள் எண்ணி மகிழ்வார்கள்.

தனிமையில் படுத்திருக்கும் கிழவர் மெல்லிய குரலில் "அமிருதலிங்கம்! அமிருதலிங்கம்!" என்று அழைத்தார். அதற்குப் பதிலில்லாமையினால் கிழவரின் மனம் சோர்ந்து அவருக்கு தாகம் நாக்கை வரட்டியது; ஆகையினால் தவித்தார். இருட்டிடும் சமயமாகிவிட்டதால் அங்குள்ள எல்லோரும் அவரவர் தொழிலைச் செய்து கொண்டிருந்ததால் யாரும் கவனிக்கவில்லை.

தாகத்தின் கொடுமையால் கிழவர் அருகில் சுற்றிச் சுற்றிப் பார்த்தார். பக்கத்தில் யாரும் இல்லை. தண்ணீர் செம்பும் இல்லை. ஆகையினால் மெல்ல தட்டித் தடுமாறி கிழ

வர் எழுந்திருக்க முயற்சித்தார். அச்சமயம் அபாரமான விசனத்துடன் முகம் வாட்டமடையக் கண்ணீர் பெருகிய வாறு அமிருதலிங்கம் அங்கு வந்தான். கிழவர் திணறிக் கொண்டு எழுந்திருப்பதைப் பார்த்து மிகவும் வருத்த முற்று "தாதா! தாதா! நான் இதோ வந்து விட்டேன். எழுந்து விழுந்துவிடப்போகிறீர்கள். இன்று எதிர்பாராது நேரமாகிவிட்டது. இதோ தீர்த்தம் சாப்பிடுங்கள்" என்று வெகு அன்புடனும் அபாரமான பக்ஷத்துடனும் கொடுத்தான்.

கிழவர் வெகு நேரமாகத் தாகத்தினுல் தவிப்பதால் கண்ணீர் மடமடவென்று குடித்ததும் சிறிது களைப்பு உண்டாகியது. தெளிந்த பின்னர் "குழந்தாய்! இன்று ஏன் இத்தனை நேரமாகிவிட்டது. நீ சிறிது நேரம் தாமதப்பட்டு வந்தால் என் மனது ஏதோ எண்ணி கவலைப்பட்டு விடுகிறது. உன்னைக் காப்பாற்றவேண்டுமென்று நான் கடவுளை நிமிடத்திற்கு நிமிடம் வேண்டுகிறேன். ஏனப்பா இத்தனை நேரம்?" என்று கனிந்த அன்புடன் கேட்டார்.

அமிரு :—(விளக்கேற்றி விட்டு கிழவரின் பக்கத்தில் உட்கார்ந்து அவரை தடவிக்கொடுத்தபடியே) தாதா! சுகமாயினும் துக்கமாயினும் அதைச் சமமாக சகிப்புத் தன்மையுடன் அனுபவிப்பதற்காகவன்றோ ஈசன் மனிதனுக்கு ஆறறிவு கொடுத்துப் பிறப்பிக்கிறுன்...

கிழவ :—ஏனப்பா! என்ன சமாச்சாரம்? உன் தாயாரிடமிருந்து கடிதம் ஏதாவது வந்ததா?

அமிருத :—இல்லை; தாதா! வந்தால் உங்களுக்குத் தெரியாதா! அதொன்றுமில்லை. கடவுள் நமக்கு ஜீவனத்திற்கு வழி காட்டி இருந்த இடங்களில் இரண்டிடங்களை திடீரென்று நிறுத்திவிட்டார். இனி வேறு இடம் எங்கு

கொடுப்பாரோ தெரியவில்லை. அதுதான் விஷயம்...அது விஷயமாகச் சிறிது விசனித்துக்கொண்டிருந்துவிட்டேன்; நேரமாகிவிட்டது.

கிழவர்:—ஆ...இரண்டு இடங்களா போய்விட்டன! ஈசா! இன்னுமா நீ சோதனை செய்கிறாய்! ஜீவனத்திற்கு என்ன செய்வது?—என்று கண்ணீர்விட்டார். அதே பெரிய கலக்கமாகிவிட்டது.

அமிருதலிங்கம் கிழவரைத் தேற்றி "தாதா! மரம் வைத்த மகாதேவன் தண்ணீர் வார்க்காமல் விடுவனோ! அவன் விட்டவழியாகட்டும். விசனிக்காதீர்கள். நாளைய தினம் இன்னும் சில இடங்களில் சென்று சுற்றுகிறேன். கடவுள் கண் திறக்கிறாரா பார்ப்போம்" என்றான்.

கிழவருக்கு ஆகாரம் தயார் செய்து கொடுத்துத் தானும் உண்டு உட்கார்ந்தான். அவன் மனத்தில் வேலை போய்விட்ட பெருங் குழப்பமும் கவலையும் பெரிதாகத் தாக்கி வதைக்கின்றன. இடையிடையே தாராபாயின் களங்கமற்ற நகைத்த முகம் பளிச் பளிச்சென்று மின்னல் போன்று தோன்றி மறைகின்றது.

திடீரென்று இரண்டு இடங்களில் வேலை போய்விட்ட தென்றால் எவ்விதம் பிழைக்க முடியும்? இரவு முற்றும் அதே ஏக்கத்துடன் புரண்டுகொண்டிருந்தான். "கலை மகளே! உன்னருளால் பிழைக்கும் ஏழைக்கு ஓர் வழி காட்டாமல் கைவிட்டுவிட்டாயே! என் தாயே!...கிழவ ரின் சம்ரக்ஷணைக்காகவாவது சீக்கிரம் ஓர் இடம் பிடித்துத் தரலாகாதா?" என்று வாணி தேவியை வேண்டினான்.

மறு நாள் வழக்கம்போல தாராபாய் வீட்டிற்குச் சென்றான். இளஞ் சிறுமியாகிய தாரா உபாத்தியாயரின் முகம் வாடி வருந்துவதைக் கண்டு "ஏன் சார்! உங்க

ளுக்கு வேறு எங்காவது இடம் கிடைத்ததா?'' என்ருள்.

அமிருத:—ஊம்! இன்னும் இல்லே. இதற்குள் கிடைத்து விடுகிறதா! இன்னும் எத்தனே அலேயவேண்டி ஈசன் விதித்திருக்கிருனே! அம்மா! தாரா! இன்று சீக்கிரம் பாடத்தை முடித்துவிட்டு நான் சில வீடுகளுக்குச் சென்று விசாரிக்க வேண்டும். பாட ஆரம்பி—என்ருன்.

மகா பரிசுத்தமும் மிகவும் பச்சாத்தாபமும் கூடிய அவள் மனதில் இவருக்கு எப்படியாவது வேலே கிடைத்து விடாதா! என்கிற எண்ணம் உண்டாயிற்று. பாடவாரம்பித்தாள்; பாடம் முடிந்ததும் அமிருதம் விடை பெற்றுக் கொண்டு இன்னுமுள்ள பாக்கி இடங்களுக்கும் பாடம் சொல்லிவிட்டு சில பெரிய மனிதர்களின் வீட்டிற்குச் சென்று விசாரித்தான்.

"எங்கள் வீட்டுக் குழந்தைகள் கிராமபோன் ரிகார்டு கேட்டு சங்கீதம் வெகு அழகாக கற்றுக்கொண்டுவிட்டார்கள். இனி வாத்தியார் வேண்டாம்'' என்று சிலர் சொல்லிவிட்டார்கள். இன்னும் சிலர் 'எங்கள் உத்தியோகத்தில் சம்பளம் குறைந்துவிட்டது. ஆதலால் இருந்த பாட்டு வாத்தியாரையும் பள்ளிக்கூடத்தையுங் கூட நிறுத்திவிட்டோம்' என்றும், பின்னும் சிலர் "10—15 கொடுத்து இக் காலத்தில் யார் பாட்டுச் சொல்லிக் கொடுக்கிருர்கள்? 1 அல்லது 2 ரூபாய்க்குச் சொல்லிக் கொடுப்பதாயின் சொல்லுங்கள்'' என்று சொன்ஞர்கள்.

இம்மாதிரி பதில்கள் கிடைத்துவிட்டதால் அமிருதலிங்கத்தின் மனம் மிகவும் வாடி வதங்கி விசனமே உருவாகிக் குழம்பிப்போய்விட்டது. வீட்டு வாடகை கொடுப்பாஞ! தனக்கும் கிழவருக்கும் வேண்டிய ஆகாரத்தைத் தேடுவாஞ? என்ன செய்வான் பாவம். கலக்கமடைந்து

மெலிய வாரம்பித்தான்.

தாராவுக்கு இந்த உபாத்தியாயர் வெகு அழகாகப் பாடி அக்கரையாக சொல்லிக்கொடுப்பதால் அவரிடத்தில் அத்யந்த பக்தியும், அபாரமான மதிப்பும், நம்பிக்கையும் உண்டாகிவிட்டன. இவருக்குத் தான் எந்த விதம் உதவி செய்யலாமென்ற யோசனையே பெரிதும் அவளைக் கப்பிக் கொண்டது. நாட்கள் சென்றுகொண்டே இருக்கின்றன.

அமிருதலிங்கம் பல இடங்களில் அலைந்து விசாரித்துக் களைத்துவிட்டான். இந்த செய்தியை தன் தாயார் அறிந்தால் விசனப்படுவாளே என்கிற நோக்கத்தால் அதைத் தெரி விக்காதிருந்துவிட்டான். இன்னொரு வீட்டில் பாடம் சொல்லும் பெண் புக்ககத்திற்குப் போய்விட்டதால் அந்த பாடமும் நின்றுவிட்டது. பூ பட்ட கண்ணில் குச்சியும் போத்தியதாம் என்பதுபோலாகிவிட்டது.

என்ன செய்வான் பாவம்! சாப்பாட்டிற்கே வழி இல் லாதுபோய்விட்டது. இவன் சிறிய பிராயத்தில் வெகு அழ காகப் பாடிய காலத்தில் இவனுடைய வயதிற்கு மீறிப் பாடும் பாட்டின் அபார திறமைக்கு மெச்சி பல பெரிய பிரமுகர்களால் இவனுக்கு மெடல்கள், துப்பட்டாக்கள், மோதிரங்கள், வெள்ளி கப்புகள் முதலியன பரிசுகளாகக் கொடுக்கப்பட்டிருந்தன. அவைகளை மட்டும் அமிருதம் எப் போதும் தன்னுடைய உயிர்போன்று மதித்து வந்தான்.

வீட்டு வாடகை பாக்கி சேர வாரம்பித்தது. மளிகைக் கடை கணக்குகள் பாக்கி நிற்க வாரம்பித்தன. அமிருதம் மகா மானியாகையினால் அவனைப் பாக்கி என்று பிறர் கேட்கும்படி நடக்கமாட்டான். ஆதலால் இதுகாறும் தன் னுயிர் போல பாவித்துவந்த மோதிரங்களையும் மெடல்களை யும் விற்கும் சமயம் ஏற்பட்டுவிட்டதால் அவனுடையமனம்

தத்தளித்து வருந்தியது. கண்ணீர் பெருகுகிறது. அவை களைப் பார்க்கிருன். பழங்காலத்துக் கதைகளை எல்லாம் எண்ணிப் பெருமூச்சு விடுகிருன். உங்களாலல்லவோ என் புகழ் ஆதிகரித்தது. ஒரு காலத்தில் உத்ஸாக வித்தாய் நீங்க ளல்லவோ தோன்றினீர்கள். அத்தகைய உங்களை விற்று என் வயிறு வளர்க்கும்படியாகி விட்டதே!'' என்று அபார மாக வருந்தினுன்.

கடன்காரன் என்று பெயர் வராமல் தன் மானத்தைக் காக்கும் முறையில் தனக்கு இவை பெரிய துணை புரிந்து உதவுதல்போலும் ஆயின என்று கண்ணீர் பெருகியவாறு, மோதிரங்களை விற்பதற்கு எடுத்துக்கொண்டு புறப்பட்டான். இதை ஷராப்பில் விற்ருல் ஒன்றுக்குப் பாதிதான் கிடைக் கும்; ஆதலால் யாரிடமாவதுதான் விலை கோரவேண்டும். யாரிடம் போவது? யாரிடம் சென்ருல் தன்னிலைமையைப் பற்றி யார் என்ன பரிகஸிப்பார்களோ என்ற எண்ண மெல்லாம் தோன்றியது.

இவற்றை தன்னிடம் அபாரமான ப்ரியம் வைத் துள்ள தாராவிடமே கொண்டு விற்கலாமாவென்று எண்ணினுன். ஆனுல் "அவளிடம் இதை விற்பதாகச் சென்ருல் இதை எடுத்துக்கொள்ளாமலேயே பணம் கொடுப்பதாகச் சொல்வாள். ஆகையினுல் அது உபயோக மில்லை. அம்மாதிரி வாங்குவது தவறு'' என்று தானே சமாதானம் செய்துகொண்டான்.

பிறகு தனக்கும் பாட்டனுருக்கும் தெரிந்த ஒரு பெரிய வரிடம் சென்று "ஐயா! என்னுடைய காலகதியின் பயனுல் நான் இதை விற்கவேண்டி இருக்கிறது. எனது நெருக் கடியான நிலைமையை உத்தேசித்து ஒரு நிபந்தனையின் பேரில் தாங்கள் எனக்கு உதவி புரியவேண்டும். அதா

வது,—இதன் கிரயத்தை எனக்குக் கொடுத்து உதவவேண்டும். எனக்கு என்றுமே இத்தகைய கஷ்ட காலம் இருக்காது என்று நம்புகிறேன். கடவுள் கருணையால் என்றாவது நற்காலம் பிறக்கும். அச்சமயம் எனக்கு இதை இதே விலையில் திருப்பிக் கொடுத்துவிடவேண்டுமாய்க் கோருகிறேன்'' என்று மிக்க வணக்கமாயும், கண்ணீர் பெருக உணர்ச்சி ததும்பவும் கேட்டான்.

இதைக் கேட்ட பெரியவரின் மனம் இளகியது. இவன் சிறிய பிராயத்தில் பாடியதும் புகழ் பெற்றதும் இவர் நன்கறிவார். ஆகையினால் விசனித்தவாறு "தம்பீ! உன்னிஷ்டப்படியே நான் கொடுக்கிறேன். விசனிக்காதே!'' என்று சொல்லி உடனே பணத்தைக் கொடுத்து மோதிரங்களை வாங்கிக்கொண்டார். அமிருதலிங்கம் சந்தோஷமும் விசனமும் கலந்த நிலைமையில் விடைபெற்றுச் சென்றான்.

நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகிக் கொண்டே சென்றன. அமிருதலிங்கத்தின் மோதிரங்கள் போனதுபோல அவனுடைய மெடல்களும் மறைந்தன. இரு ஜீவன்கள் பிழைக்கவேண்டி எத்தனை சிக்கனமாக விருப்பினும் சமாளிக்க முடியாது போயிற்று. பாட்டு சொல்லிக்கொடுக்கும் சரியான தகுந்த வித்வான்களுக்கு பிழைப்பில்லாமலும் மதிப்பில்லாமலும் போய்விட்டது.

எங்கு பார்த்தாலும் அரை குறை சங்கீதம் தெரிந்த புருஷர்களும் பெண்களும் வீட்டுக்கு வீடு பாடசாலைபோல் ஆரம்பம் செய்து ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் முதலிய சில்லரைகளுக்குச் சொல்லிக்கொடுத்து, உண்மையான சங்கீத ஞானத்தை வளரச் செய்யாமல் சிறு பெண்களுக்கு ஏதோ சொல்லிக்கொடுத்துக்கொண்டு காலக்ஷேபம் செய்யும் வகை பெருத்துவிட்டதால் உயர்ந்த பாடகர்களுக்குப்

பணங்கொடுக்க முடியாதுபோய்விட்டது. கேவலம் சிறிய சம்பளத்திற்குச் செல்ல அமிருதம் சற்றும் சம்மதிக்கவில்லே.

மனேவ்யாகூலத்தினுல் அமிருதலிங்கத்தின் தேகம் நாளேக்கு நாள் மெலிந்து, முகக்களே குன்றி, சோபை குறைந்து, கண்கள் குழி விழுந்து ஒரு மாதிரியாகிக் கொண்டு வருவதைக் கண்ட தாராவுக்கு உண்மையிலேயே மனம் தாங்காத வருத்தம் உண்டாகியது. தான் வாத்தியாருக்கு உதவி செய்ய முன்வந்தால், அவர் தன்னேப்பற்றி என்ன நினேத்துவிடுவாரோ என்ற ஓர் எண்ணமும் உண்டாகியது. தன் பிதாவிடம் சிபார்சு செய்யலாமென்ருல் அவர் என்ன எண்ணுவாரோ என்றும் தோன்றியது. சில காலம் குழம்பித் தவித்தாள்.

பிறகு தைரியமாகத் தன் தந்தையிடம் அவருடைய பரிதாபத்தைத் தெரிவித்து, அவருக்கு ஏதாவது ஒரு வித உதவி செய்யவேண்டுமென்று கோரினுள். இதைக் கேட்டு அவர் அதற்கு இசைந்தார்.

ஒரு தினம் அமிருதம் வழக்கம்போல வந்தான். என்றும் இல்லாத ஓர் உத்ஸாகமும் புன்னகையும் முக மலர்ச்சியும் தாராபாயிடம் காணப்பட்டதை யறிந்து அமிருதலிங்கம் காரண மறியாது வியந்தான். அமிருதம் வந்ததும், தாராபாய் "வாருங்கள்...இன்று ஓர் சந்தோஷச் செய்தியை உங்களுக்குத் தெரிவிக்கப் போகிறேன்" என்று முடிப்பதற்குள் அமிருதம், "என்ன! என்ன சந்தோஷம்! தாரா!...உடனே சொல்லு" என்று ஆவலுடன் கேட்டான்.

தாரா:— நான் படிக்கும் பள்ளிக்கூடத்தில் உங்களுக்கு வேலேயாகிவிட்டது. இதற்கு முன்னிருந்த வாத்யார் ஊருக்கு மாற்றப்பட்டு விட்டார். என் பிதாவிடம் சொல்லி உங்களுக்கு உதவி செய்யும்படியாகக் கேட்டேன்.

அவர் உடனே இசைந்து ஏற்பாடு செய்துவிட்டார். நாளைய தினம் உங்களுக்குக் கடிதம் வரும். அடுத்த வாரமே வேலையில் அமர்ந்துவிடலாம். மாதம் 40 ரூபாய் சம்பளமாம். கடவுள் கிருபையினால் இது கிடைத்ததற்கு நான் பரம சந்தோஷ மடைகிறேன்.

இந்த சந்தோஷகரமான வார்த்தையைக் கேட்ட உடனே அமிருதலிங்கத்தின் ஆனந்தம் கரை புரண்டு அபாரமான உணர்ச்சியினால் ஒரு குதி குதித்தான். கண்கள் அன்றலர்ந்த தாமரைமலர் போன்று மலர்ந்தன. முகம் பூரித்து பிரகாசமாய் சோபித்தது. அவன் தன்னை மீறிய களிப்புடன் "தாரா!...இது உண்மையான செய்தியா! வாஸ்தவமாகவா எனக்கு 40 ரூபாய் சம்பளத்தில் வேலை அகப்பட்டிருக்கிறது? என்னை ஏமாற்றாமல் சொல்லு" என்று கெஞ்சியவாறு கேட்டான்.

தாரா:—ஆமாம்...உண்மையாகத்தான். நான் தங்களுக்கு வீணாக ஏமாற்றத்தைக் கொடுக்கமாட்டேன். தங்களுக்கு எவ்விதத்திலாவது ஓர் வேலை கிடைக்க வேண்டுமே என்று இரவு பகல் நான் கடவுளை வேண்டிக்கொண்டே இருந்தேன். இன்று காலையில்தான் என் பிதா இச் செய்தியைத் தெரிவித்தார். அப்போது முதல் தாங்கள் எப்பொழுது வருவீர்களென்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். உடனே தெரிவித்தேன். இனி தங்களுக்கு கஷ்டமிருக்காது—என்று குயில்போலக் கூறினாள்.

அமிருதலிங்கம் அகமகிழ்ந்தான். "தாரா! உன்னுடைய அன்பிற்கும் இப்பேருதவிக்கும் நான் என்ன கைம்மாறு செய்வேன்? நான் எத்தனையோ பாவம் செய்திருந்த போதிலும் கொஞ்சம் புண்ணியம் செய்துதான் இந்த இடத்தைக் கடவுள் எனக்குக் காட்டினார்" என்று தன் மன உணர்ச்

சியைத் தெரிவித்தான்.

அச்சமயம் தாராவின் தகப்பனர் அங்கு வந்து "ஸார்! குழந்தை சொன்னளா! நாளைய தினம் கடிதம் வரும். திங்க ளன்று வேலைக்குச்செல்லவேண்டும். உமக்கு ஓய்வு வேளை யில் தனிப் பாடமும் வைத்துக்கொள்ளலாம்" என்ருர். அமிருதலிங்கத்திற்கு ஊர்ஜிதமாயிற்று.

இச் சந்தோஷச் செய்தியை பெரியவரிடம் தெரிவித் தான். பெரியவரும் மனமகிழ்ந்தார். திங்களன்று வேலையை ஒப்புக்கொண்டான். தாராவுக்கு அன்று முதல் பள்ளிக் கூடத்திலும், வீட்டிலும் தவருமல் பாட்டு சொல்லிக் கொடுத்து வந்தான். தாரா தினே தினே சங்கீதத்தில் விருத்தியடைந்துகொண்டே வந்தாள். அமிருதலிங்கம் எப்போதுமே தாராவிடம் அதிக பக்ஷமாக பாட்டு சொல் லிக்கொடுத்து வந்தான். இந்த விதமான உதவி கிடைத்த தும் அவளிடமும் அவளது தந்தையிடமும் அளப்பரிய பிரீதியும் நம்பிக்கையும் உண்டாகி நாளைக்குநாள் வளர்ந்து கொண்டே வந்தது.

தாராவின் தகப்பனர் பெருத்த தனவந்தரா யிருப்பினும் அவர் மற்ற பெரிய மனிதர்களைப்போல தடபுடலாகவோ, எல்லா பெரிய மனிதர்களிடம் பழக்கங்கொண்டு பெரும் ஹோதாவிலோ இல்லாது, சர்வ சாதாரணமாயும் ஒரு வரிடமும் பழகாமல் தனிப்பட்டும் வாழ்க்கை நடத்துவது பலருக்கும் வியப்பாக விருக்கும். அனேக பெரிய மனி தர்கள் இவரை பல விருந்துகளுக்கும் கச்சேரிகளுக்கும் அழைப்பார்கள். எதிலும் கலந்துகொள்ள மறுத்துவிடுவார். தனி வாழ்க்கையையே விரும்புவதால் இவரிடம் யாரும் அதிகம் நெருங்கவில்லை.

இம்மாதிரியே இவருடைய வாழ்க்கை நடந்து வரு

கிறது. பெண்ணோடு பேசுவதும் பெண்ணின் இனிய கானத்தைக் கேட்பதுமாக அந்த சந்தோஷத்திலேயே ஈடு பட்டு வந்தார். அவர் சில வேளையில் ஏதோ ஆழ்ந்த யோசனையுடன் பெருமூச்சு விடுவார். ஆனால் தாரா இதை யறியும்படி நடந்துகொள்ளவேமாட்டார். அவளைச் சந் தோஷமாக வளர்ப்பதிலேயே தன் காலத்தை முற்றிலும் செலவு செய்து வந்தார்.

ஒரு தினம் அவருக்கு திடீரென்று உடம்பிற்கு வந்து விட்டது. வரும்பொழுதே பலமாகப் படுத்துவிட்டதால் தாராவுக்கு மிகவும் மன வருத்தமும் பயமும் உண்டாகி விட்டன. வீட்டில் ஒரு வேலைக்காரியைத் தவிர வேறு யாரும் கிடையாது. ஆகையினால் தந்தைக்கு சீக்கு ஏற் பட்டவுடன் தாராவுக்கு மிக்க கிலி பிடித்துவிட்டது; முகத்தின் சோபையே மாறிவிட்டது.

தாயைக் கனவிலும் அறியாத தாரா, தாயாயும் தந்தை யாயும் ஒரே மனிதனை நம்பி பிரேமையுடன் இருந்ததால் அம் மனிதன் படுத்த உடனே அவளுடைய இதயத்தில் அவளை யறியாத கவலை வேலை செய்து வருத்த வாரம்பித்து விட்டது. பெரிய மருத்துவர்களைக் கொண்டு வைத்தியம் செய்யலானாள். சதா தன் தந்தையின் பக்கலிலேயே இருந்து அவருக்கு வேண்டிய சிகிச்சைகளைத்தானே செய்து வந்தாள். இந்த வேதனையில் பாட்டு, படிப்பு, ஊண், உறக்கம் யாவையும் வெறுத்தாள். தன் பிதா குண மடைந்துவிட்டால் போதுமே என்று இரவு பகல் கடவுளை வேண்டி பஜனைசெய்துகொண்டே இடிந்துபோய்விட்டாள்.

அதிகாரம்—3

காதலின் சிறப்பு—பேதையின் திகைப்பு

தாராவின் அபரிமிதமான அன்பில் ஈடுபட்டு தினே தினே உள்ளுக்குள்ளேயே அன்பு வளர்ந்து கொண்டு வருவதால் தாராவின் துயரம் அமிருதலிங்கத்தை பாதித்தது. தாரா பள்ளிக்கூடத்துக்கு வருவதையும் பாட்டையும் நிறுத்திவிட்டதால் அவளை அடிக்கடி பார்க்கவும் முடியாது போயிற்று. நன்ருக பாடக்கூடியவளுக்கு இம்மாதிரி தடை ஏற்பட்டது மிகவும் கவலையாகிவிட்டது.

தாராவுக்கு பாட்டு சொல்லிக் கொடுக்காமல் எப்படி அங்கு செல்வது என்று சற்று யோசித்தான். விசாரிப்பதற்காகச் செல்வதால் பரவாயில்லை என்று தன்னையே தேற்றிக்கொண்டு தாரா வீட்டிற்குச் சென்ருன். தாராவின் தகப்பனுகிய சபாபதி மிகவும் கடுமையான நோயினுல் பாதிக்கப்பட்டு ஒரு புறம் படுத்திருக்கிருர். தாராவோ விசனமே வடிவாக அவரருகில் உட்கார்ந்து கண்ணீர் உதிர்த்துக்கொண்டிருக்கிருள்.

இந்த பரிதாபகரமான காக்ஷியைக் கண்ட அமிருதத்தின் மனம் உருகியது. வருத்தத்துடன் அருகில் சென்று விசாரித்தான். சபாபதி அமிருதத்தை ஒருமுறை உற்று நோக்கினர். "உட்காரு" என்று ஆசனத்தைக் காட்டினர். ஆனல் அவர் ஒன்றும் பேசவில்லை. மவுனமாக விருந்தார்.

அவருக்கு உடம்பு அதிகமாக வாரம்பித்த நாள் முதல் அடிக்கடி பல பேர்கள் அவரைப் பார்க்க வந்துகொண்டே இருக்கிருர்கள். அவர்கள் வரும்போது தாராவையும் அங்கு இருக்காமல் போய்விடும்படி அவளது தந்தை யனுப்பிவிடு

வார். தாராவுக்கோ, தந்தையை சில நிமிடங்கள் கூடப் பிரிய மனமில்லையாகையினால் அவர்கள் வருகையையே வெறுப்பாள். அதோடு அம் மனிதர்களைப் பார்த்தாலே தாராவுக்கு மனத்தில் பிடிக்காமல் வெறுப்பும், ஒருவிதமான தோற்றமும் உண்டாயின.

சீக்காக இருக்கும் மனிதனிடம் வந்து அடிக்கடி தொந்தரவு செய்வதாகவே நினைத்தாள். அவர்களை வரவேண்டாம் என்று சொல்லிவிடவும் தாரா தயாராக இருந்தாள். ஆனால், அவள் பிதா அவர்களை வரவழைத்து இஷ்டத்துடன் பேசுவதோடு, ஓர் விதமான புதிய பாஷையில் அவர்களிடம் பேசுவதால் தான் தடுக்கவும் அஞ்சினாள்.

அன்றும் அமிருதம் வந்து அமர்ந்த உடனேயே நாலைந்து பேர்கள் வந்து விட்டதால் அம்ருதலிங்கமும் தாராவும் விலகி வெளியே வந்துவிட்டார்கள். தாராவின் கண்ணில் நீர் பெருகிக்கொண்டே இருக்கிறது. அவள் அன்னகார நித்திரை இன்றி வேதனைப்படுவதால் பாதியாக மெலிந்துபோய்விட்டாள். இது கண்ட அம்ருதலிங்கம்... "தாரா! உன் தேகம் இத்தனை மெலிந்து துரும்பு போலாகி விட்டதே! உனக்குச் சரியான தகுந்த கவனிப்பாளரும் இல்லை...தாரா!......உன்னிலைமையைப் பார்த்தால் உன் தந்தை விஷயத்தில் நீ அதைரியமாக விருப்பதுபோலத் தோன்றுகிறது. அப்படிக்கொன்றும் பயப்படாதே. இன்னும்சில தினங்களிலேயே குணமாகிவிடும். உன் முகத்தைப் பார்த்தால் எனக்கு மிகவும் பரிதாபமாக இருக்கிறது. புலம்பாதே! தாரா!" என்று மிக்க கனிகரத்துடன் சொன்னான்.

தாரா:—தாங்கள் என்னமோ தைரியம் சொல்கிறீர்கள். டாக்டர்கள் எல்லாம் ஒரு மாதிரியாகத்தான் சொல்லிவிட்டார்கள். அவர்கள் பேசுவதிலிருந்து என்னைப்

பரதேசியாக விட்டுவிட்டுத்தான் போய்விடுவாரோ வென்ற பயம் என்னைச் சூழ்ந்துகொண்டு வதைக்கின்றது...சரி!... அந்த பயங்கரத்தை நினைக்கும்போதே என்னுள்ளம் பகீ ரென்கிறதே! நான் என்ன செய்வேன்...எவ்விதம் புவியில் வாழ்வேன்?

அம்ருத :—தாரா!...வைத்தியர்கள் அப்படியா சந்தேக மாகச் சொல்லுகின்றார்கள்...அடாடாடா...ஐயோ! நான் என்ன விதம் இதற்குத் தேறுதல் கூறுவேன்?...தாரா!... புலம்பாதே!...புலம்பாதே! கடவுள் அப்படி யொருவித மான குறையும் செய்யமாட்டார். கடவுளைப் பிரார்த்தனை செய்து வேண்டிக்கொள்ளு...தாரா!...

தாரா :—சார்! நான் கடவுளை வேண்டாத நேரமும் உண்டா! அல்லும் பகலும் அவரிடம் முறையிட்டுக் கொண்டே இருக்கிறேன். எனக்கு கிருபை செய்வாரோ மாட்டாரோ!....என்னிலைமை மிகவும் அபாயமானதாக வன்றோ இருக்கிறது. நான் வருந்தாமலும் பயப்படாமலும் எப்படி இருப்பது?...ஐயா! என் தந்தை மறைந்துவிட் டால்...ஆ!...பிறகு...எனக்கு யார் இருக்கிறார்கள்? என் கதி அனாதையிலும் அனாதையாக வன்றோ ஆகிவிடும். உபாத்தியாயரே!...என்னால் தாங்க முடியவில்லையே...

அம்ரு :—தாரா!...வருந்தாதே; கடவுளை நம்பு...நானோ பரம தரித்திரன். கேவலமான அனாதை...சங்கீதத்தினால் வயிறு வளர்க்கும் ஓர் சாமானிய ஊழியன். நான் உன்னைக் காப்பாற்றுகிறேன் என்று கூறத் திறமையோ, தைரியமோ அற்றவனாக இருக்கிறேன். எனினும் தாரா!... என்னை வித் யாசமாக எண்ணிவிடாதே!...என் கண்களை நான் எத்தனை ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள்கிறேனோ அத்தனை கனிகரத் துடன் உன் வீட்டு வாசலில் நாய் போலக் காவலிருந்து

உனக்கு யாதொரு தீங்கும் நேரிடா வண்ணமும், துஷ்டர்களால் துன்பம் நேராமலும் காப்பாற்றுகிறேன். வேண்டுமாயின் உனக்கு விவாகமாகி உனக்கு ஓர் காப்பாளன் ஏற்பட்டு உன்னைக் கைப்பற்றும் வரையில் என் தாயாரை உனக்குத் துணை இருக்கும்படி அழைத்து வருகிறேன். இல்லை என்றால் கிழவரை சதா இங்கிருந்து உனக்கு நல்ல சத் விஷயங்களைக் கூறி பொழுது போக்கும்படிக்குச் செய்கிறேன்...தாராபாய்!...கேவலம் ஏழையாகிய நான் இதை விட என்ன செய்ய முடியும்? சொல்லமுடியும்?" என்று கூறிக்கொண்டே கண்ணீர் உதிர்த்தான்.

தாரா:—ஹா! எதிர்கால பயங்கரத்தை நினைக்க எனக்கு ஏதோ செய்கிறதே! நான் என்ன செய்வேன்?...தாங்களும் என்னை நிராகரித்துக் கைவிட்டு விடுவதுபோலன்றோ தங்கள் வார்த்தைகள் விளக்குகின்றன...தாங்கள் என்னை ஏற்றுக் கொள்ளமாட்டீர்களா!...நான் பணத்தையா விரும்புகின்றேன்...நான் பணத்தை விரும்புகிறவளல்ல...நான் உயர்ந்த குணத்தை, உத்தம மனிதரை, ஆப்த அன்புமயமான ஹ்ருதயத்தை விரும்புகிறேன்.

அம்ருதம்:—ஆஹா!...என்ன...என்ன...தாரா!...நான் கேட்பது உண்மையான வார்த்தைகளா...அன்றிச் சொப்பன உலக யாத்திரையா...புரியவில்லையே! என்னை விரும்புகிறாயா...என்னையா...என்னையா...

தாரா:—(சற்று உறுதியான குரலுடனும், விழித்த பார்வையுடனும்) ஆம்....ஆம் தங்களையே எனது பதியாக அடைந்து தங்கள் பாதுகாப்பில் இருக்க என்னிதயபூர்வமாக வேண்டுகிறேன். எனது தந்தைக்கு இத்தகைய ஆபத்து வரும் என்று நான் கனவிலும் கருதவில்லையாதலால் இதைப் பற்றி வெளியிடவோ, மறைமுகமாகவாவது சொல்லவோ

சந்தர்ப்பமில்லை. என் தந்தை என்னிஷ்டத்திற்கு மாறாக எதுவுமே செய்யமாட்டார் என்கிற நம்பிக்கை எனக்கு உண்டு. ஆகையினால் அவர் என் விவாகத்தைப்பற்றி பிரஸ்தாபிக்கும் பொழுது இதைத் தெரிவிக்க சமயம் பார்த்திருந்தேன். திடீரென்று இத்தகைய ஆபத்து வந்து என்னைப் பரதேசியாக்கிவிடப் போகிறார் என்று நான் நினைக்கவில்லையே!....என்னுடைய இன்னிலைமையில் நான் கட்டாயம் சொல்லாமலிருக்க எப்படி முடியும்? என்னைப் பரதேசியாக விட்டுவிட வேண்டாம்...என்னைக் காப்பாற்றுங்கள்... என்று ஆவேசங்கொண்டவளைப் போலக் கூறி தேம்பித் தேம்பி அழுதபடியே அம்ருதலிங்கத்தின் இரு கால்களையும் கட்டிக்கொண்டு அப்படியே சாய்ந்துவிட்டாள்.

இந்த எதிர்பாராத அதியாச்சரியமானதும் தன்னால் நம்பவே முடியாததுமான விஷயத்தைக் கேட்ட அம்ருதத்தின் உள்ளம் சில விநாடிகள் அவனை மீறி சஞ்சாரஞ் செய்தது. அடுத்த நிமிடமே தாராவின் கட்டு மீறிய துக்கத்தைக் கண்டு, "தாராபாய்! தெளிந்து எழுந்து பாரு விசனிக்காதே!

தாரா!...என்னுடைய வறுமை என்ற கபாடம் குறுக்கே வழியை யடைத்துக் கொண்டிருந்ததால் நான் மனத்துள் பொங்கி எழுந்து கொழுந்து விட்டெரியும் காதலை இஜ்ஜென்மாவில் அடைய முடியாதென்ற எண்ணத்தினால் வெளியிடாமல் மறக்கவே முயற்சி செய்து வந்தேன்....... தாரா!...புலம்பாதே. என் கண்மணி! நான் அந்தஸ்தில் உனக்குச் சரிசமமானவன் அல்லவெனினும் அபாரமாகப் பொங்கி எழும் அன்பின் ஆழத்திற்குச் சமமாகவே இருப்பேனாகையினால் உன் விருப்பப்படியே நான் உன்னைக் கைவிடுவதில்லை...இது சத்தியம். புலம்பாதே; அதோ உன் தந்தை அழைப்பதுபோல விருக்கிறது. சென்று விசாரி.......நானும்

அங்கு வந்தால் அவர் என்ன நினைப்பாரோ !" என்றான்.

அதே சமயம் உள்ளே இருந்த மற்றவர்களும் வெளியே சென்றார்கள். இது கண்டு தாரா தந்தையின் மீதுள்ள வாஞ்சையினால் ஓரே ஓட்டமாக உள்ளே ஓடி தந்தைக்குக் கஞ்சி கொடுத்துப் பக்கலில் உட்கார்ந்தாள். அமிருதலிங்கம் சில நிமிடங்கள் நின்றான். பிறகு விடைபெற்றுக் கொண்டு போய்விட்டான்.

தாரா தன் தந்தையின் உடம்பைத் தடவியவாறு "அப்பா ! நான் கேட்பதற்குக் கோபித்துக்கொள்ளாதீர்கள். நான் வெகு நாட்களாகக் கேட்க நினைத்தேன். ஆனால் தாங்கள் என்ன நினைப்பீர்களோ என்று பயந்து பேசாதிருந்துவிட்டேன். அதை இப்போது சொல்லாமலிருக்கவும் முடியவில்லை. தாங்கள் தேக சுகங் கெட்டுப் படுத்த நாள் முதலாக இந்த மனிதர்கள் அடிக்கடி வந்து தங்களுக்கு மிகவும் தொந்தரவு கொடுக்கிறார்கள். அப்பா ! இவர்களைப் பார்த்தால் எனக்குச் சிறிதும் பிடிக்கவே இல்லை. இவர்களைப் பார்க்கும்போதே வெறுப்பும் கோபமும் அசங்கியமும் உண்டாகின்றன. ஒவ்வொருவனும் அயோக்கியன் போலவும் துஷ்டன் போலவும் தோன்றுகிறான். இவர்கள் ஏனப்பா இங்கு வரவேண்டும் ? இவர்களை வேண்டாமென்று சொல்லிவிட்டால் என்ன?"...என்று குழந்தையைப்போல கெஞ்சியவாறு கேட்டாள்.

அத்தனை உடம்பிலும் சபாபதி மெல்ல தன்னை சமாளித்துக்கொண்டு தன் மகளை அருகிலழைத்துத் தடவிக் கொடுத்தவாறு "கண்ணே என்னருமை தாரா ! நீ இத்தனை புத்திசாலியாயும் யூகசாலியாயும் இருப்பதைக் காண என்னுள்ளம் பூரிக்கின்றது. செல்வீ ! உனக்குச் சில விஷயங்களை நான் முக்கியமாகக் கூறவேண்டிய சம

யத்தை எதிர்பார்த்துக் கொண்டே இருந்தேன். எனக்குத் தற்போதுள்ள நிலைமையைப் பார்த்தால் என்னுடைய காலத்தின் முடிவு சமீபித்து விட்டதென்றே தோன்று கிறது. ஆகையால் நானே சொல்ல நினைத்தேன்; நீயும் கேட்டுவிட்டாய். கண்மணீ! நான் கூறப்போகும் விஷயத் தைக் கேட்டு நீ பயப்படவோ, திடுக்கிடவோ, வருந்தவோ செய்யாதே'' என்றார்.

பொருள் விளங்காமல் அவர் கூறியதைக் கேட்டதும் தாராபாயிக்குப் பெரிய குழப்பமும், ஒருவித ஆவலும், பயமும் உண்டாகிவிட்டன. என்ன விஷயத்தைப்பற்றிச் சொல்லப்போகிறாரோ தெரியவில்லையே! ஒருகால் தனது காதல் சம்மந்தமான விஷயத்தை யறிந்துகொண்டு கண்டிப் பாரோ! என்ன சொல்வாரோ!'' என்று ஒரு விநாடிக்குள் மிகுந்த குழப்பமும், ஆவலும், ஒரு விதமான பீதியும் அடைந்துவிட்டாள்.

அதிகாரம்—4

நடுக்குறும் செய்தி—திடுக்கிடும் காட்சி

உலகத்தில் எத்தகையோருக்கும் எந்த விஷயமாயினும் ஒரு ஆவல் உண்டாகிவிட்டால் அவ் விஷயத்தை யறியும் வரையில் ஒவ்வொரு க்ஷணமும் தன்னை மீறி பர பரப்பும் ஆத்திரமும் உண்டாவது மக்களின் இயற்கையான சுபாவமன்றோ!

தாராவுக்கு அவள் பிதா கூறிய வார்த்தைகளினால் அதிக ஆவலும் ஒருவிதமான உணர்ச்சியும் உண்டாகிவிட்டன. உடனே அவள் தந்தையை நோக்கி, "அப்பா! தாங்கள்

சொல்வது ஏதோ விடுகதை போல விருக்கிறதே! நான் பயப்படும்படிக்கு அத்தகைய கொடிய விஷயம் என்ன தெரிவிக்கப் போகிறீர்கள்? சீக்கிரம் சொல்லுங்கள். ஏன் யோசிக்கின்றீர்கள்...அப்பா!...ஏன் கண்ணில் நீர் வடிகின்றது. அப்பா! அப்பா!....ஏன் விசனப்படுகிறீர்கள்''.... என்று கண்ணீர் உதிர்த்தவாறு தந்தையின் கண்ணைத் துடைத்துத் தடவிக் கொடுத்தாள்.

சபா:—கண்ணே! என்னருமை தாரா!...செல்வத் தாராபாய்!....கொடிய விஷயமா வென்று கேட்கிறாய்... நான் சொல்லப்போவது கொடிய விஷயமல்ல....கொடிய விஷமே போன்றதாகும்....என்னுருயிர் கண்மணீ! தாரா!... பிறகு கோபிக்கமாட்டாயே?....விஷயமறிந்தபின் என்னை வெறுக்கமாட்டாயே!...

தாரா:—ஹா!....அப்பா! இதென்ன இவ்விதம் கேட்கிறீர்கள்?...இஜ்ஜென்மத்தில் எனக்கென அளிக்கப்பட்ட தனிப்பெரும் கடவுள் போன்ற தந்தையையா நான் வெறுப்பது?....ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்?...சொல்லுங்கள்... சொல்லுங்கள்...

சபா:—இன்பச் செல்வீ! தாரா!...நீ பரிசுத்தமான இதயத்தை உடைய தூய நற்பாவையாகையால் கூறினேன். கண்ணே! உன்னுடைய பிதா ஓர் பெரிய கொள்ளைக்காரன்...தீவட்டித் திருடர்களின் எஜமானத் திருடன்...இப்போது இங்கு வந்த அத்தனை பெயர்களும் கொள்ளைக்காரர்கள்—என்று கூறி முடிக்குமுன் தாரா தீயை மிதித்தவள்போலத் துள்ளிக் குதித்து "ஹா!...என்ன! என்ன!.... இவர்கள் திருடர்களா...தாங்கள் கொள்ளைக்காரரா! ஐயோ!...அப்பா! ஏன் இப்படி வாய் குளறுகிறீர்கள்? தேக அசுகத்தினால் மயக்கமோ, மாருட்டமோ? ஆஹா!

தந்தையே! டாக்டரை கூப்பிடட்டுமா?...என்று அபார மான திடுக்கிடலுடன் தந்தையின் முகத்தை மாறி மாறிப் பார்க்கிருள்.

சபா :—கண்ணே! நான் முதலிலேயே தெரிவித்தபடி நீ பயப்படுவாய் என்றது சரியாகிவிட்டதே! எனக்கொரு மாருட்டமும் இல்லே. நான் நல்ல புத்தி தெளிவுடன்தான் இருக்கிறேன். எனக்கொரு விதமான கோளாறு மில்லே. டாக்டரைக் கூப்பிடாதே!...வேண்டாம்...செல்வீ! உன் ஊைப் பெற்ற பாவி பெரிய திருடன். அந்த கிராதகனின் கதையை என்ஞல் சற்று சக்தியுடன் கூற முடியும்போதே கேட்டுக்கொள்ளு.

தாரா!...நீ யொரு கள்ளனின் வயிற்றில் பிறந்த காரிகை...சேற்றில் செந்தாமரை பூத்தது போல மகாபாவி என் வயிற்றில் நீ பிறந்தாய்...கண்மணீ!...நாம் இதுகாறும் ஓர் சக்ரவர்த்திபோன்று சுகித்துவரும் பொருள் யாவும் பலரிடம் கொள்ளே யடித்த, பல பெரியமனிதர்கள் முதல் ஏழைகள் வரையில் வயிறு எரிந்து கண்ணீர் விட்டுக் கதறிய பொருளேயாகும்.

தாரா:—(இடை மறுத்து) ஐயோ!....அப்பா!...இதுஉண் மையா !....தாங்கள்....கொ ...ள்...ளே...க்...கா...ர....ரா .... தாங்களா கொள்ளே யடித்தீர்கள்? தாங்களா...தாங்களா ஐயையோ !....

சபா :—தாரா! என் செல்வமே!...பாதகன் நான்தான் கொள்ளே யடித்தேன். நான்தான் கொள்ளே யடித்தேன் நான்தான் கொள்ளேக்காரன்....என்கையினுல்...என்கையி னுல்....என் தீவட்டியினுல் எத்தனேயோ பெயர்களே அடித் தேன். விரட்டினேன். மண்டையை உடைத்தேன். அங்க ஹீன மாக்கினேன்...சிலரை உலகத்தையே விட்டும் ஓட்டி

னேன். மகா சண்டாளன் நான் செய்யாத அக்ரமம் கிடையாது. மகா உத்தமிகளை எல்லாம் மனம் துணிந்து....கல்லினும் கொடிய இதயத்துடன் கற்பைக் கவர்ந்து குடித்த கள்ளனானேன்....உத்தமிகளின் வயிறெரிந்து இட்ட சாபத்திற்கெல்லாம் ஆளானேன்.

தாரா :—ஹா !....ஐயோ !....கேட்பதற்கே சகிக்கவில்லையே! உங்களைப் பெற்றோரும் கண்டிக்கவில்லையா! இத்தனை கொடிய மனிதரின் உதிரத்தில் உதித்த பாவியா நான்.... கள்ளனின் புதல்வியா....

சபா :—கண்ணே ! கொள்ளைக்காரனின், கொலைப்பாதகனின் புதல்வியே யாவாய்....நான் செய்துள்ள அக்கிரமங்களை எண்ணினால் ஈசன் மன்னிக்கவே முடியாது. என் மனமே என்னைக் குத்திக் காட்டுகிறது....செல்வீ ! என் பிதாவுக்கு நான் ஒரே புதல்வனாக விருந்தும் பாலியத்தி விருந்து துஷ்ட சகவாசத்தில் பழகி வெகு நாட்கள் பெற்றோருக்கு அடங்காது இருந்து கடைசியில் ஓடிவிட்டேன்.

கண்ணே! அன்று பிரிந்த பெற்றோரை இன்னும் அறியமாட்டேன். சொப்பனத்திலும் பார்க்கவில்லை....கொள்ளைக் கூட்டத்தில் சேர்ந்து அந்த தொழிலில் வெகு சாமர்த்தியமாயும் புத்திசாலியாயும் தேர்ச்சி பெற்று தலைவன் பதவியடைந்து நல்ல பக்காத்திருடனானேன், பல போலீஸார் எங்களைப் பிடிக்க எத்தனையோ முயற்சி செய்தார்கள். அவர்களின் கையில் அகப்படாமல் பல முறைகளிலும் தப்பியதோடு பல போலீஸாரைக் கொன்றுவிட்டோம். எத்தனையோ நாட்கள் அவ்விதம் தப்பினோம்.

பிறகு ஒரு முறை எங்களைப் பிடித்து தண்டித்துவிட்டார்கள். சுமார் 4 வருடங்கள் சிறை தண்டனை கிடைத்தது. சிறையிலிருந்த ஒரு வார்டரைக் கொன்று விட்டு

நான் தப்பித்துக்கொண்டேன். ஒருவர் கண்ணிலும் படா மல் ஒளிந்தே சில காலம் இருந்தேன். என் முகத்தையே மாற்றிக்கொள்ள எண்ணி ஒரு வைத்தியனின் உதவியினால் முகத்தில் ஒரு திராவகத்தைக்கொட்டி இம்மாதிரி தழும்புகள் உண்டாக்கிக்கொண்டு என்னையே மாற்றிக்கொண்டேன்.

அதற்கப்புறமும் என் தொழிலை வெகு ஜாக்ரதையாகச் செய்து வந்தேன். பல பெண்களை நான் கெடுத்துப் பாழ் படுத்திய பாவியாக விருப்பினும் ஒரு சமயம் ஒரு வீட்டில் கொள்ளை யடித்தபோது ஒரு கிழவியும் ஒரு பெண்ணும் எங்கள் கையிலகப்பட்டுக் கொண்டார்கள்; அப் பெண் மிகவும் ரூபவதியாயும், பரம சாதுவாயும் இருந்ததால் கல்லி னும் கொடிய கடின இதயத்தைக் கொண்ட என்னுடைய மனமும் சற்று இளகியது. கிழவியும் அப் பெண்ணும் பரித விப்பதைக் கண்டு சகிக்காமல் இரக்கங்கொண்டு கிழவியை சரிப்படுத்திக்கொண்டு அப் பெண்ணை நான் கல்யாணம் செய்துகொண்டேன்.

எனக்கென ஓர் வாழ்க்கைத் துணைவி வேண்டுமென்ற ஆவலும் இருந்ததால் நான் அந்த யோசனை செய்து அவளை மணந்து ஒரு தனித்த இடத்தில் வாழ்க்கை நடத்தத் தொடங் கினேன். என்னை மணக்கவும் என்னுடன் குடும்பம் நடத்தவும் உன் தாயார் சிறிதும் விரும்பவில்லை. நான் செய்த கொடுமையினால் வாய் திறக்காத பூச்சிபோலாகிவிட்டாள். எனினும் எனக்கு பல முறைகளில் இத்தீய பழக்கத்தை விட்டுவிடும்படியாக உபதேசம் செய்து வேண்டுவாள்.

கண்ணே! அக் காலையில் எனது திமிரினால் அவளையே அவமதித்து இம்சை செய்து வந்தேன். பல விடங்களில் கொள்ளையிட்ட பொருள்களை புதையல்போலச் சேர்த்து வைத்தேன். தானே என்னை காட்டிக் கொடுத்து விடுவதா

யும் உன் தாயார் பயமுறுத்திப் பார்த்தாள். ஆதலால் அவளையே கொலை செய்ய நான் ஏற்பாடு செய்துவிட்டேன்.

தெய்வத்தின் எண்ணம் வேருகவிருந்தது. அப்போது உன் தாயார் 5 மாத கர்ப்பிணி என்பதை அறிந்தேன். எனக்குள்ள பல துஷ்ட எண்ணங்களுக்கிடையே ஒரு குழந்தை வேண்டுமென்கிற ஆசையும் ஊசலாடியதால் என்னுடைய எண்ணத்தை மாற்றிக்கொண்டு அவளை ஓர் சிறையில் வைப்பதுபோல வைத்திருந்தேன்.

மிகுதி மாதங்கள் சென்றதும் ஓர் தினம் இரவு நான் கொள்ளை யடித்துவிட்டு விடியற்காலம் வீட்டிற்கு வந்தேன். என் மனைவி இருந்த அறையில் சிறிய குழந்தையின் அழுகைக் குரல் கேட்டது கண்டு மிக்க சந்தோஷத்துடன் உள்ளே சென்று பார்த்தேன்.

"அந்தோ! பரிதாபம்....பரிதாபம்! அக் கோரக் காக்ஷியை என்னென்று கூறுவேன்? கண்மணீ? இப்போதும் அக்காக்ஷி என் கண்முன்பு தாண்டவமாடுகிறது. என் வாழ்நாளிலேயே அன்றுதான் நான் என்றும் கண்டறியாத ஓர் மின்சார சக்தியால் தாக்கப்பட்டவன் போன்ற தவிப்பை யடைந்தேன்.

பச்சைக்குழந்தை—அப்போதுதான் ஜனனமாகிய குழந்தை—நீயொரு புறம் கிடந்து கத்துகிருய். உன் தாயார் சவமாக ஒரு புறம் கிடக்கின்ருள். உன் பாட்டியார் முன்பே இறந்துவிட்டாள். இந்தக் கன்ருவியைக் கண்டவுடனே சில வினடிகள் தத்தளித்தேன். பச்சைக் குழந்தைகளை அதுவரையில் பார்த்ததே இல்லையாதலால் எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை.

குழந்தையின் முகமே பூர்ண சந்திரனைத் தோற்கடிக்கும் அத்தனை ஒளியுடன் பிரகாசித்தது. உடனே

குழந்தையை வாரி எடுத்துக்கொண்டேன். புலம்பினேன். எது செய்து என்ன பயன்? என் கையாட்களின் உதவியால் சவத்தை அடக்கம் செய்தேன். உன்மேல் என்னையறியாத அபாரமான ப்ரீதி விழுந்துவிட்டதால் அன்று முதல் உன்னை வளர்ப்பதிலேயே என் கவனம் சென்றது.

கண்ணே தாரா! நீ எனக்கு மகளாகப் பிறந்தது மட்டுமல்லாமல் என்னை நல் வழியில் திருத்தும் பரம குருவாகவும் ஆய்விட்டாய். நீ பிறந்த பிறகு உன்னை வளர்க்கும் பொறுப்பும் பாசமும் என்மீது விழுந்துவிட்டதால் உன்னைத் தனியே விட்டுச் செல்வதற்கு மனமில்லாமலும் திக்கில்லாமலும் போய்விட்டதால் அன்று முதல் என் தொழிலிலிருந்து விலகியவனாய் விட்டேன். அக்கூட்டத்தவரின் பந்தத்திலிருந்து விடுபட்டு உன்னை எடுத்துக்கொண்டு கன்யாக்குமரிக்குப் போய்விட்டேன்.

அவ்விடத்தில் அதி யற்புதமான அம்மன் தரிசனமும், ஆனந்தமான சமுத்திரக் காட்சியும், கோயிலின் உன்னதத் தோற்றமும், இயற்கை யழகின் வனப்பும் ஒன்று கூடி என்னை உண்மையில் பரவசமுறச் செய்தன. திடீரென்று கன்னியாக்குமரியில் வந்து குடியேறிவிட்டால் போலீசார் சந்தேகப்படப்போகிறார்களே என்று அஞ்சி அங்கு சமுத்திரக் கரைக்குப் பக்கத்திலுள்ள ஓர் சத்திரத்தில், பிழைக்க வந்தவன் போல நடித்து ஒரு ஓட்டல் வைத்து அங்கு வரும் பிரயாணிகளுக்குச் சாப்பாடு செய்துபோட்டு ஜீவிப்பது போல நடித்து வந்தேன்.

சுமார் 5 வருடங்கள் அப்படியே இருந்தேன். பிறகு உன் படிப்பிற்கும் பாட்டிற்கும் ஆசைப்பட்டு இங்கு வந்து இவ்வீட்டை விலைக்கு வாங்கி உன்னையே ஆதாரமாகக் கொண்டு இதுகாறும் உன்னை உத்ஸாகமாய் வளர்ப்பதி

லேயே நாட்டமாயிருந்துவிட்டேன். கண்ணே! என் காலமும் முடிந்துபோய்விட்டது. இன்னும் சில மணிகளோ, தினங்களோதான் ஜீவித்திருப்பேன்.

என் செல்வமே!....உன் முகம் ஒரு மாதிரியாகிறதை நான் கவனிக்கிறேன். தாரா!...இதோ இரும்புப் பெட்டியின் சாவி—இரும்புப் பெட்டியில் சுமார் இரண்டு லக்ஷ ரூபாய்களுக்குமேல் நோட்டுகளாயும், சவரன்களாயும், ரூபாய்களாயும், தங்கக் கட்டிகளாயும், நகைகளாயும் பலவித ரூபமாகவிருக்கின்றன. கண்மணீ! அவைகளை வைத்துக்கொண்டு ஏகபோகமாய் உன்னிஷ்டப்படிக்கு செலவு செய்து இன்புறுவாய்.

கண்மணீ! என்னுருயிர் செல்வமணீ! மகா பாவியாகிய இந்தக் கொடிய சண்டாளனின் வயிற்றில் பிறந்தோமே என்று விசனிக்கின்றாயா! என் இன்பச்செல்வீ! நான் இனி மறைந்துவிடுவேன். கவலைப்படாதே! உன்னுடைய ஓர் அந்தரங்கமான ரகஸியத்தையும் நான் அறிவேன். அதாவது உனது விவாகத்தைப்பற்றி நான் கவலைப்படாமலிருந்ததற்குக் காரணம் உன் காதலை நானறிந்ததேயாகும். கண்மணீ! அம்ருதலிங்கத்தினிடம் நீ எத்தகைய அன்பு கொண்டிருக்கிறாய் என்பதைப் பலகாலும் நான் அறிந்திருப்பதால் உனக்கு விரோதமாக அவ்வகையில் நான் ஏதும் செய்ய நினைக்கவில்லை. என் செல்வமே! நான்தான் அன்பின் மகிமையை—காதலின் களிப்பை—அறியாத கசடனாகக் காலம் கழித்துவிட்டேன். நீயாவது சந்தோஷமாக விரு. அம்ருதலிங்கத்தையே மணந்து ஆனந்தமாக வாழ்க்கை நடத்து...."என்றார். அவருடைய ஆயாசம் அதிகமாகிக்கொண்டே வந்தது. கண்ணிலிருந்து நீர் தாரை தாரையாக வழிகின்றது. அவரால் பேச முடியாது சங்கட

மான திணறல் உண்டாகிவிட்டதால் கண்களை மூடிக் கொண்டு தன் மகளின் கையைப் பிடித்துக்கொண்டார்.

தாராவுக்கோ இந்த பயங்கரமானதும், நடுக்குற்று அலறும்படியானதுமான கோர சம்பவத்தைக் கேட்கும் போதே அவள் கண் முன்பு கொள்ளைக் கூட்டத்தினர் அட்டகாஸம் செய்து பலரை இம்சிப்பதாயும், குத்துவ தாயும், கொலை செய்வதாயும், உத்தமிகளை எல்லாம் வதைப்ப தாயும், பொருள்களைக் கொள்ளையிடுவதாயும் தோன்றி அவளை அபாரமான திகிலில் ஆழ்த்துகின்றன.

தன் கண்களையே தன்னால் நம்பமுடியாமல் பிரமை யடைகின்றாள். தன் பிதாவின் முகத்தைப் பார்க்கிறாள். அவ்வறையைச் சுற்றிப் பார்க்கிறாள். "ஆ!....நான் ஓர் கொடிய கொள்ளை, கொலைப் பாதகம் செய்தவருடைய மகளா!....என் ஊனும் உதிரமும் கொலைப் பாதகத்தின் பயனால் வளர்க்கப்பட்டதா....ஐயோ!....நான் ஒருசண்டாள னுக்குப் பிறந்தவள், கொலைக்காரனுக்குப் பிறந்தவள் என் பதை என்னுருயிர்க் காதலரறிந்தால்....ஹா!....என்னைக் கட்டாயம் வெறுத்தே தீருவார். ஆம்....ஆம்....என்னை மணக்க எப்படி இசைய முடியும்?....

என்ன....என்ன...அஞ்சாது கொள்ளை யடித்து.... பஞ்சமா பாதகங்களில் முதன்மையான கற்பழிக்கும் கொடிய தொழில் புரிந்து, கை கூசாமல், மனந் தளராமல் பலரைக் கொலை செய்து பாபத்தையே தாங்கும் சுமை தாங்கியாக இருப்பவரா?...ஐயோ....இத்தனை கொடிய காரியங்களைச் செய்த மனிதரா இவர்....ஹா...நினைக்கவே மனம் பகீரென்கிறதே!...

இவர் காலமும் முடியப்போகின்றது. என் கதியும் அதோகதியாகிவிட்டது...மகா பரிசுத்தவானும் உத்தமகுண

சீலனுமாக விளங்கும் அவரிடம் என்னுடைய கேவலமான விஷயங்களை எவ்விதம் கூறுவது...” என்று தாரா தனக்குள் கட்டுமீறிய குழப்பத்தையும் அபாரமான விசனத்தையும் அடைந்து கல்லாய்ச் சமைந்துவிட்டாள்.

அவளுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. தன் பிதா கொடுத்த சாவியைக்கொண்டு இரும்புப் பெட்டியைத் திறக்கவும் கூசியவாறு திறந்து பார்த்தாள். அந்தோ!... அங்கிருந்த நோட்டுக்களும், பணக்குவியலும் தங்கக் கட்டிகளும், சவரன்களும், ஆபரணங்களும் தாராவின் கண்ணுக்கு பல ஜனங்களின் வயிறெரிந்து சொரியும் பாணங்களாயும், கண்ணீர் ஆறுயும், சாபக் கட்டிகளாயும் தோன்றியதே யன்றி உண்மைப் பொருள்களாகத் தோன்றவில்லை.

ஆயிரக் கணக்கான ஜனங்கள் எதிரே நின்று இவளை வயிறெரிந்து திட்டுவது போன்ற தோற்றம் உண்டாகி மருண்டுவிட்டாள். கண்ணீர் மளமளவென்று வருகிறது. அங்கு நிற்கவும் அக் காட்சியைக் காணவும் அவளால் முடியாத சித்திரவதை செய்துவிட்டபடியால் மீண்டும் இரும்புப் பெட்டியைப் பூட்டிக்கொண்டு தந்தையினருகில் வந்தாள்.

சபாபதியின் நிலைமை அப்போது முன்னிலும் கேவலமான ஸ்திதியிலிருப்பதைக் கண்டு பலவித குழப்பத்துடன் திகிலடைந்து தவித்த மனத்துடன் “அப்பா!...அப்பா! தங்களுக்கு என்ன செய்கிறது...என் அப்படித் திணறுகின்றீர்கள்...டாக்டரைக் கூப்பிடட்டுமா!...ஐயோ எனக்கும் பயமாக விருக்கிறதே! என்ன செய்வேன்?” என்று, துடிக்கின்றுள். தவித்து உருகுகின்றுள். தந்தையின் முகத்தையே பார்த்துப் பார்த்து பதறுகிறுள்.

அதிகாரம்—5

மங்கை நல்லாளின் பொங்கிய இதயம்

இங்கிருந்து சென்ற அம்ருதலிங்கத்திற்கு மனம் இருக்கை கொள்ளவே இல்லை. அவனுக்குக் கிட்டாதென்று எண்ணி இருந்த பண்டம் தாஞகவே கிடைத்து விட்ட அதிசயம் அவன் மனத்தில் அபாரமான அலைபோலக் கொந்தளித்து ஆனந்த நிர்த்தனம் செய்கின்றது. அவளுடைய பிதாவின் ஆபத்தான நிலைமையில் தனிமையில் விட்டு வந்துவிட்டோமே என்கிற ஏக்கமும் உண்டாகியதால் அவனுக்கு வேறு வேலைகள் மீதும் மனம் நாடவில்லை. தாராவின் பரிதாபகரமான விசன முகமே கண்முன்பு தாண்டவ மாடியது. ஆகையினுல் மறுபடியும் தாராவின் வீட்டிற்கு வந்தான்.

தாரா அலங்கோலமாக ஒரு புறம் விம்மி விம்மிப் புலம்புகிருள். தாராவின் தந்தை உலகை விட்டு நீங்கி நிம்மதி யடைந்து விட்டார். வேலைக்காரி தாராவைத் தேற்றிக் கொண்டிருக்கிருள். வீடு அல்லகல்லோலப் படுகிறதைப் பார்த்த அம்ருதலிங்கத்தின் மனம் உருகியது. மிக்க சோகத்துடன் தாரா வருகில் ஓடிஞன். "தாரா! தாரா! என்ன செய்யலாம்? இறப்பும், பிறப்பும் சகஜமல்லவா! என் கதையை நினைத்துப் பாரு....தாரா!...அவர் வந்த காரியம் முடிந்துவிட்டது. புலம்பாதே! எத்தனை வயதான போதிலும் பெற்ற தாய் தந்தையர்களைப் பிரிய யாருக்காவது மனம் வருமா! தாரா!...தாரா!'' வென்று தேற்றிஞன்.

தாராவுக்கு அமிருதலிங்கத்தின் முகத்தைப் பார்க்கவும் பயமாக விருக்கிறது. அவனுக்குத் தனது சூழல் தெரிந்து

விட்டால் தன்னைப்பற்றி என்ன நினைப்பானே என்கிற கவலையும் ஏக்கமும் உண்டாகிவிட்டதாகையினால் அந்த வேதனை யொருபுறம் வாட்டுகின்றது. என்ன செய்வாள் யாவம்! பரிதாபகரமான முகத்துடன் அவனை நோக்கு கிறாள்; கதறுகிறாள். இனி என்ன செய்து என்ன பயன்?

சவச் சடங்குகள் யாவும் முடிந்தன. தன்னிரை யழிந்து சோகமும் யோசனையும் ஒன்றுகூடி குழம்பிப் போய் தாரா புலம்பியவாறு படுத்துவிட்டாள். ஊரார் வயி றெரியும் சொத்தில் தான் சந்தோஷமாகக் காலத்தைக் கடத்திவிட்டோமே என்ற எண்ணம் அவளால் மறக்கவோ, தடுக்கவோ முடியவில்லை.

மீண்டும் தன் தந்தையின் இரும்புப் பெட்டியைத் திறந்து பார்த்தாள். வீட்டிலோ யாரும் இல்லாமையினால் திக்கு திக்கு என்ற பயம் வேறு நடுக்குகின்றது. அங்கு பெட்டியிலுள்ள பொருள்களைப் பார்த்தாலோ வயிறு பற்றி எரிகிறது. தந்தை இறந்த பிறகும் அவர் மீது கடுஞ்சினம் பொங்கி எழுந்து வெறுப்பும் உண்டாகிறது. அப் பெட்டி யில் இருந்த ஒவ்வொன்றையும் கிளறிப்பார்க்க வாரம் பித்தாள். அவைகளில் சில கடிதங்கள், சில தஸ்தாவேஜிகள் முதலிய பல காகிதக் கட்டுகள் கிடந்தன. அவைகளை எல்லாம் ஒவ்வொன்றாகப் படித்தாள். கொள்ளைக் கூட்டத் தினருடன் நடந்த கடிதப் போக்கு வரவு என்று தெரிந்ததும் பின்னும் அவளை யறியாத வேதனையும் விசனமும் பொங்கி எழுந்தன. அழுகையும் ஆத்திரமும் வெறுப்பும் கோபமும் ஒன்று கூடித் தாண்டவமாடும் நிலைமையில் அவைகளை எல்லாம் ஆராய்ந்து பார்த்தாள்.

வெறி கொண்டவள் போல அவைகளைத் தாறு மாறாக கிழித்துப் போட்டுக் கிளறிப் பார்க்கிறாள். இங்கு

மங்கும் ஓடுகிருள். தலையைப் பிச்சிக்கொள்ளுகிருள். சிறிது நேரம் அசைவற்று நிற்கிருள். தபீரென்று உட்காருகிருள். விரலைக் நடித்துக் கொள்ளுகிருள். நாற்புறமும் நோக்கி விழிக்கிருள். சரேலென்று கதவைப் பூட்டிக்கொண்டு தன் படுக்கை யறைக்கு வந்து தபாரென்று கட்டிலின்மேல் விழுந்துவிட்டாள்.

தலைவிரி கோலமாகக் கிடந்து புலம்புகிருள். துக்கம் விசாரிக்க சிலர் அவ்வப்போது வந்து செல்வதும் இவளுக்குப் பிடிக்கவில்லை. ஒருவரையும் நிற்க விடாமல் அப்போதே அனுப்பிவிட்டாள். அம்ருதலிங்கம் வந்தால் தான் என்ன செய்வது என்ற திகில்தான் ப்ரதானமாகத் தோன்றி வருத்துகின்றது. கொலையாளியின் மகள், கொள்ளைக்காரனின் மகள்....ஐயோ...நினைக்கும்பொழுது என்னையே நான் வெறுத்துக்கொள்கிறேனே. என் பவிஷைத் தெரிந்து கொண்டால் அவ்வுத்தமர் என்ன நினைப்பார் ?

ஹா! எல்லாவற்றையும் விடப் பெரிய இடி போன்ற விஷயம் என் இதயத்தைப் பிளக்கின்றதே! என்ன செய்வேன் ? என் காதலரின் வீட்டில் கொள்ளை யடித்து அவர் குடும்பத்தையே நிர்மூலம் செய்த பாவிகள், சண்டாளர்கள் யாரோ வென்று இதுகாறும் எண்ணி விசனப்பட்டுக் கொண்டிருந்தேனே! அக்காரியத்தையும் இப்பாவிகளே நெஞ்சம் துணிந்து அஞ்சாது செய்திருக்கிருர்கள் என்ற கொடிய விஷயமும் இக்கடிதங்களின்மூலம் தெரிந்துவிட் விட்டதே!...ஐயோ! இத்தகைய பரம சண்டாள செய்கையை என்னுயிர்க் காதலர்...

சீச்சீ!....இனி எனக்கு அவ்வாறு கூறிக்கொள்ள பாத்யதை உண்டா! இல்லை; இல்லை!....என் பாத்யதை எல்லாம் மடிந்தது. பாழாகியது. ஐயோ! வாழ்வே இடிந்து

பொடிந்து விழ்ந்தது...நாஞே....கொள்ளைக்காரனின், கொலைப் பாதகனின் மகளா....அவ்வுத்தமரைக்காதலிப்பது?....முடியாது....முடியாது....இவ்விஷயம் இஜ் ஜென்மத்தில் முடியாது....நான் அதற்குப் பாக்கியம் செய்யவில்லை. மகா துர்ப் பாக்யம் செய்த பாவி யாகையினுல் தான் இத்தகைய மனிதன் வயிற்றில் பிறந்தேன்....

"ஹா! நான் இதுகாறும் பரம சந்தோஷமாக எண்ணியனுபவித்த சொத்தும் சுகமும் இத்தகைய பயங்கரமான கொடிய சர்ப்பம் போன்ற சொத்தாகவன்ரே ஆய்விட்டது!" என்று தனக்குள் மட்டு மிதமின்றி எண்ணுததும் எண்ணி மனம் புண்ணுகித் தவிக்கும் சமயம் அம்ருதலிங்கம் தாராவுக்கு ஆகாரம் எடுத்துக்கொண்டு அங்கு வந்தான்.

தாரா தலைவிரி கோலமாகப் படுத்துக் கிடப்பதைக் கண்டு மன வருத்தம் தாங்காது கண்ணீர் உதிர்ந்துவிட்டது. "தாரா! என் ரத்தினமே!...நன்ருகத் தெரிந்த நீயுமா இப்படி கிடப்பது? அவர் வந்த காரியம் முடிந்துவிட்டது. அவர் கிளம்பிவிட்டார். உலகமே அவ்வளவுதான். தாரா! எழுந்திரு. இதோ உனக்கென நானே ஆகாரம் தயார் செய்துகொண்டு வந்தேன். கொஞ்சம் சாப்பிடு. தாரா!... புலம்பாதே!...எழுந்திரு"...என்று வெகு அன்புடனும், கனிந்த காதலுடனும் கூறினுன்.

தாராவுக்கோ பலவிதமான துன்பங்கள் அவள் மனதில் சிக்கிப் போராடுவதுடன் தான் எண்ணியிருந்த எண்ணத்தில் மண் விழுந்துவிட்டதே! என்ற தீராத விசனம் மட்டும் அபாரமாகப் பொங்கி எழுந்து அவளைச் சித்திரவதை செய்வதால் தன்னுருயிர் காதலனைப் பார்க்கும்போதே அந்த விசனம் அதிகரித்து அவளை ஆழ்த்திவிட்டது. தன்னிடங் கொண்டுள்ள அன்பால் தானே ஆகாரம் தயார்செய்து

கொண்டு வந்திருப்பதைத்தான் என்னவிதமாகத் தடுக்க முடியும் என்று குழம்பிவிட்டாள்.

மெல்ல ஒருவாறு யோசனை செய்து தனக்குள் ஓர் முடிவுக்கு வந்தாள். எழுந்து உட்கார்ந்து "என்னை மன்னிக்கவேண்டும். நான் பரம துரதிருஷ்டம் செய்த பாவி... என்னைப்போன்ற பாவிகள் உலகிலேயே இருக்கமாட்டார்கள்....எனக்கு தற்போதுள்ள மன நிலையில் கண்ணைத் திறக்கவே பிடிக்கவில்லை. சாப்பாட்டை நினைக்கும்போது வாயிலெடுக்க வருகிறது. வயிற்றில் ஏதோ செய்கின்றது. மார்பு பதைக்கின்றது...தலை சுழலுகின்றது. கண்ணில் நெருப்பு வைத்ததுபோல் எரிகின்றது...

ஹா !...நான் என்ன செய்வேன் ?...எனக்கு ஆகாரமே வேண்டாம். வித்தியாசமாக நினைக்காதீர்கள்....தங்களுடைய பேரன்பிற்கு நான் எத்தனை ஜென்மம் எடுத்தாலும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது என்னை தயை செய்து விட்டுவிடுங்கள். அதோடு இன்னும் ஒரு வேண்டுகோள். என்னுடைய நிலைமை மிகவும் கேவலமாக விருப்பதால் எனக்கும் பயித்தியம் பிடித்துவிடும் போலிருக்கிறது. ஆகையினால் இன்னும் சில தினங்கள் வரையில் நான் ஒருவருடனும் பேசாமல் தனிமையாக இருக்க விரும்புகிறேன். அப்போதுதான் என் மனம் சற்று சமாதானமடையும் என்று நம்புகிறேன்.

தாங்கள் இதை வித்தியாசமாக எண்ணாமல் மன்னிக்க வேண்டும். நான் பிறகு சொல்லியனுப்பும்போது நீங்கள் வாருங்கள். அதுபரியந்தம் எனக்குத் தனி வாழ்க்கை வாழ உதவி புரியவேண்டும். இதற்குக் காரணமோ, மற்ற எதுவோ கேட்க வேண்டாமென்று நான் மிகவும் மன்றாடி கேட்டுக்கொள்கிறேன்" என்று தன்னுள் பொங்கி எழும்

கட்டு மீறிய துக்கத்துடன் கண்ணீர் வடியக் கூறிவிட்டுக் குப்புறப்படுத்து விம்மி விம்மிப் புலம்புகிறாள்.

தான் ஒன்று எண்ணி வந்ததற்கு மாறாக இங்கு நடந்த சம்பவத்தைக் கேட்ட அமிருதலிங்கத்திற்கு தூக்கிவாரிப் போட்டது. ஒன்றுமே தோன்றாமல் சிறிது நேரம் பிரமித்தான்; திகைத்து நின்றான். "தாரா!...தாரா!...என் கண் மணீ! உன் வார்த்தைகள் எனக்கொன்றுமே விளங்கவில்லையே! உன்னிஷ்டத்திற்கு மாறாகவோ, மனம் கோணும்படியாகவோ, நோகும்படியாகவோ நான் ஒன்றுமே செய்யமாட்டேன். இதை நிச்சயமாக நம்பு...

தாரா!...நீ விரும்புவது போலவே நான் வராமல் இருக்கிறேன். நீ யழைத்தபிறகே வருகிறேன்...ஆனால்... நீ சொல்வது விசனத்தினாலா அல்லது என்னையே வெறுத்துக் கூறுகிறாயா!....இதுமட்டும் எனக்குத் தெரிந்துவிட்டால் போதும்....என்னுருயிர் தாரா!...ஒரு வார்த்தை மட்டும் கூறிவிடு"...என்று மிகவும் வருத்தத்துடன் கண்ணீர் பெருகியவாறு கெஞ்சிக் கேட்டான்.

தாராவுக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியாமல் தத்தளிக்கின்றாள். அம்ருதலிங்கத்தின் ஆழ்ந்த அன்பின் உச்ச நிலையைக் கண்டு பரிதாபப்படுகிறாள். அவள் முகத்தைப் பார்க்கிறாள். பிறகு மெல்ல தன்னை சமாதானம் செய்துகொண்டு "என்னைக் காரணங் கேட்க வேண்டாமென்று முதலிலேயே கூறினேன். தயவுசெய்து மன்னிக்க வேண்டும். என் மனம் புசல் காற்றில்கப்பட்ட பஞ்சு போல தத்தளிக்கின்றது...தாங்கள்...

இதற்குள் அமிருதலிங்கம் இடை மறுத்து "கண்ணே! தாரா! வருந்தாதே! வருந்தாதே!...என் மனத்தில் கொந்தளித்தெழும் ஆழ்ந்த அன்பினால், பரிசுத்தமான காதலினால்

நான் கேட்டுவிட்டேன். என் இன்ப நிலையமே! உன் பொருட்டாக நான் எத்தகைய த்யாகத்தை வேண்டுமானு லும் செய்யத் தயாராக விருக்கிறேன். நீ கலங்காதே! என்னை மன்னித்துவிடு...நான் சென்று வருகிறேன்...பாக் கியம்!... எஜமானியம்மாளை கவனித்துக்கொள்........பட் டினி கிடந்தால் உடம்புக்கு ஆகாது. விசனம் எல்லோருக் கும் தாங்கமுடியாமல்தானிருக்கும்...என்ன செய்யலாம்? ஜாக்ரதையாகக் கவனித்துக்கொள். நீதான் இப்போது இவளுக்குத் தாயார்"...என்று கூறும்போது கண்ணீர் மடமடவென்று உதிர்ந்துவிட்டது.

அதற்குமேல் பேச முடியவில்லை. "தாரா!....நீ சொல்லி யனுப்பும் வரையில் நான் இவ்வீதி வழி கூட வரமாட் டேன். நான் போய் வருகிறேன்" என்று கூறியபடியே தாராவை திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே தாங்க மாட்டாத விசனத்துடன் மறைந்துவிட்டான். ஏற்கனவே இருள் சூழ்ந்து தவிக்கும் தாராவின் கண்களுக்கு அவ்விடம் ஒரே அந்தகாரமாகிவிட்டது. செய்வதறியாத சித்திரவதை அவள் இதயத்தில் செய்து அவளை நெருப்பின் மீது புழு வென துடிக்க வைத்துவிட்டது. அனலில் வாடிய தளிர் போலத் துவண்டு கட்டிலின்மீது சாய்ந்து சவம்போலானுள்.

பாக்கியம் தாராவின் வேலைக்காரி என்ற பட்டமே யன்றி தாராவின் தாய் போன்று வளர்த்த செவிலித்தாய் தான் பாக்கியம் என்று திட்டமாகக் கூறலாம். அவளுக்கும் அவள் புருஷனுகிய கணபதிக்கும் தாராதான் உயிர் நிலை போன்றவள். தாராவின் முகம்சுளித்து கூட அவர்கள் கண்டு சகிக்கமாட்டார்கள். அத்தனை வாஞ்சையுடன் தாராவை கண்மணிபோன்று காத்து வளர்த்துவருகிருர்கள்.

தாரா அங்கு படுத்துக் கிடப்பதைக் கண்டு இருவரும்

மிக்க விசனத்தை யடைந்து மன்றுடி அவளுக்குச் சிறிது ஆகாரத்தை ஊட்டினூர்கள். தாரா ஓர் துக்கப்பதுமை போலப் படுத்திருந்தாள். அச்சமயம் சுமார் 10 பேர்கள் வந்து தாராவின்முன்பு அட்டகாஸமாக உட்கார்ந்தார்கள்.

தாரா திடுக்கிட்டுப் போய் அவர்களை உற்றுக் கவனித் தாள். தன் பிதாவிடம் அடிக்கடி வந்து பேசிய மனிதர்கள் இவர்கள் என்றதை யறிந்ததும் தாராவுக்கு திடுக் கிட்டது. இன்னும் இவர்கள் எதற்காக வந்திருக்கிறூர் கள்?' என்ற பெருத்த குழப்பம் உண்டாகிவிட்டது. அப்போது இராக்காலமாகையினூல் இருள் கப்பிக்கொண் டிருந்தது. வந்தவர்கள் ஏதோ கருத்துடன்தான் வந்திருக் கிறூர்கள் என்றது மட்டும் அவர்கள் முகத்தைப் பார்த்த உடனே தெரிந்துகொண்டாள். அவர்களிடம் நல்லதன மாகவே நடந்துகொண்டு பேசத் தீர்மானித்து "வாருங்கள். உட்காருங்கள்...எனக்குப் பிதா இறந்துவிட்ட துக்கத்தை விட உங்களுக்குப் பெரியவராக பக்க பலமாயிருந்த பெரிய வர் மறைந்துவிட்டதுதான் மிகவும் விசனிக்கத் தக்கது" என்று கூறிக் கண்ணீர் வடித்தாள்...

இது கேட்ட அவர்கள் "ஊம்...என்ன செய்யலாம்? நீயும் துரதிருஷ்டம் செய்து பிறந்தாய்! நாங்களும் கொடுத்து வைக்கவில்லை. அவரைப்போல நல்ல மனிதர் இனி உலகத்தி லேயே கிடைக்கமாட்டார்கள்... உம். இனி சென்ற விஷ யங்களைப்பற்றிப் பேசி உபயோகமில்லை...தாரா!...உன் னிடம்தான் நாங்கள் காரியமாக வந்தோம் என்பதை நீ தெரிந்துகொண்டிருக்கலாம்...

என்று முடிப்பதற்குள் தாரா "ஐயன்மீர்! அத்தகைய வீரனின் உதிரத்தில் பிறந்ததற்காவது எனக்கு அந்த சூசனையும் யோசனையும் தெரிந்திருக்கவேண்டாமா? பெரி

யார்களே! தாங்கள் எந்த காரியமாக வந்திருந்தபோதிலும் அதைத் தாராளமாகத் தெரிவியுங்கள். என் பிதாவின் மூலம் நான் சகல சமாச்சாரங்களேயும் எப்போதோ அறிந்திருக் கிறேன். ஆகையினுல் தயங்காமல் சொல்லலாம்'' என்ருள்.

அவர்களில் ஒருவன் "தாரா! வீணுக வார்த்தையை வளர்த்தவேண்டாம். உன் தகப்பனுர் எங்களுக்குத் தலைவ ராக விருந்தாலும், நாங்கள் கொள்ளேயடித்துக் கொடுக்கா மலும், தக்க சமயங்களில் பலவித கஷ்டங்களேப்பட்டுக் காப்பாற்ருமலும் இருந்தால் உன் பிதா இந்த பெரிய பதவியி லிருக்கமுடியுமா? ஒரு நாளும் முடியாது. ஆகையினுல் உனது சகலமான செல்வமும், சந்தோஷ வாழ்க்கையின் உன்னதமும் யாவும் எங்களுடையவை என்பதை மறுக்கவே முடியாது.

தாரா! உன் தந்தை என்னவோ மறைந்துவிட்டார். நீ உன் மனத்தில் எங்களேப்பற்றி ஏதோ வித்தியாசமாக நினைத்திருப்பதையும், அந்தப் பாட்டுக்காரனிடம் ஏதோ காதல் கொண்டிருப்பதையும் நேற்று உன் தந்தையுடன் நான் பேசும்போது தெரிந்துகொண்டேன்.

தாரா :—(இடைமறுத்து) என்ன! என்ன!...தாங்கள் இப்படி வித்தியாசமாகவா எண்ணிவிட்டீர்கள்! அப்படி யொன்றும் இல்லவே இல்லே. அவரை நான் காதல் கொள் ளவே இல்லே...சேச்சே! என் அந்தஸ்திற்கும் அவரது அந்தஸ்திற்கும் சற்றும் பொருந்தாது. ஏதோ பெரிய வித் வானுக இருக்கிருரே என்று பாட்டு மட்டும் சொல்லிக் கொண்டேன். இனி அதுவுமில்லே. நீங்கள் வந்திருக்கையில் அந்த மூன்ருவது மனிதன் ஏன் இங்கிருக்கவேண்டும் என்றதனுல்தான் அவரைத் தந்திரமாக அனுப்பிவிட்டேன். என் தந்தைக்கு நான் மகளல்லவா! அவருக்கு விரோதம்

செய்வேனு !

கள்ளன் :—ஓகோ! அப்படியா! சரி...நீ இப்போது தனித்த மனுஷியாகிவிட்டாய். வயதும் யுக்த வயதாகிவிட்டது. உன் பிதாவின் விச்வாசத்தை மறக்காமல் நாங்களும் நீயும் நடக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். எங்களில் சிறிய வனுயுள்ள ஒருவனை நீ மணம் செய்துகொண்டு இந்த ஆஸ்திகளையும் வீட்டையும் வைத்துக்கொண்டு சந்தோஷமாக இல்லரசு புரியலாம். இதோ இவ்விளைஞர்களில் யாரை உனக்குத் தேர்ந்தெடுத்துக்கொள்கிறாய் ? என்றான்.

இதைக் கேட்டதும் தாராவின் மனம் நெருப்புபோல எரிந்தது. ஏற்கெனவே உள்ள வேதனையுடன் பின்னும் பலமாகத் தாக்கிவிட்டது...இக்கள்ளர்களின் கையில் சிக்கி தன்னுயுள் மடியவேண்டியதுதான்.. என்ற ஏக்கமும் பிடித்துவிட்டதால் தன் பிறவியையே நொந்துகொண்டு, தன்னையே வெறுத்துத் தவிக்கலானுள்.

அதிகாரம்—6

அருங்குணமணியின் அற்புதச் செய்கைகள்

சில விநாடி நேரம் அங்கு மௌனம் குடிகொண்டிருந்தது. மினுக்கு மினுக்கென்று எரியும் விளக்கும் காற்றில் அலைந்து தன் சஞ்சலத்தைக் காட்டியது. அங்குள்ளவர்களின் எஜமானன் கனைத்துக்கொண்டு தாராவை நோக்கி "தாரா ! என் மவுனமாகிவிட்டாய் ! கண்ணீர் பெருகுகிறது ?" என்றான்.

தாரா :—உம்...இதுகூடவா நான் கூறவேண்டும். என்னைப் பெற்று வளர்த்து ஆயிரம் பாடுபட்ட என்னருமை

பிதா உயிருடனிருந்து என் விவாகத்தை நடத்திச் சந் தோஷப்பட்டிருந்தால் எத்தனை நன்ருக இருக்கும்? அதற்கு நான் பாக்யம் செய்யவில்லையே என்கிறதை நினைக்கும் பொழுது என்னை யறியாத துக்கம் வருகிறது. அவர் இன் னும் எத்தனையோ நாளைக்கு உயிருடன் இருக்கப்போகிருர் என்று மலைத்திருந்தேன். இப்படி இறந்துவிடுவார் என்று தெரிந்திருந்தால் நான் அவர் இருக்கையிலேயே விவாகம் செய்துகொண்டிருப்பேன். இதனுல்தான் வருத்தமாக விருக்கிறது.

உம்...என்ன செய்யலாம்...தகப்பனுருக்குத் தகப்ப னுராக நீங்கள் எல்லாம் இருக்கையில் குறைவென்ன?... பெரியீர்! என் பிதா இருக்கும்பொழுது எனக்கு இம்மாதிரி நடந்துகொள்ளும்படித்தான் கூறினுர். நானும் அப் போதே அதற்கு இசைந்தேன். என் பிதாவின் காலத்தில் எப்படி நடத்தினுரோ, அதேமாதிரி என்னையும் நடந்து கொள்ளச்சொன்னுர். உங்களில் ஒருவரையே மணந்து இல்லறம் நடத்தும்படியும் சொன்னுர்.

அன்பர்களே! என் பிதாவின் ஈமச் சடங்குகள் யாவும் முடிந்த பின்னர் நானே உங்களை யழைத்து இவைகளைக் கூறி நமது காரியத்தை நடத்த எண்ணினேன். இதற்குள் நீங்கள் என்னையே நம்பாது இப்படிக் கேட்டுவிட்டீர்கள்... ஐயா! உங்களுக்குள் யாரை மணப்பதென்பதை நான் பிறகு சொல்லுகிறேன். ஏனெனில் பெற்ற பிதா செத்து இன்னும் இரண்டு நாட்கள்கூட ஆகாமலிருக்கையில் விவாக வார்த்தை சொல்வது உசிதமேயல்ல...அது சுபமும் அல்ல. ஆகையினுல் கருமாதி முடியட்டும். உடனே நாம் நமது காரியத்தைச் செய்துவிடலாம்" என்று வெகு நம்பிக்கை யைக் காட்டும் பார்வையுடனும் தொனியுடனும் கூறினுள்.

இதைக் கேட்ட அவர்கள் "தாரா! உன் தந்தை அப்படியா சொல்லிச் சென்ளுர்? இது உண்மைதாளு! இம்மாதிரி இப்போது பேசிவிட்டுப் பிறகு ஏமாற்றிவிடு வாயோ!"...என்ருர்கள்.

தாரா :—ஆகா!...இப்பேதைப் பெண்ணிடத்தில் இத்தனை நம்பிக்கைகூடவா இல்லை! உங்களை மோசம் செய்தால் என் பிதாவை நான் மோசம் செய்தவளாகமாட்டேளு? உங்களுக்கு துரோகம் செய்தால் என்னையே நான் துரோகம் செய்தவளாகவன்ரு ஆவேன். என்னை நான் காப்பாற்றிக் கொள்ளும்பொருட்டு என் கடமையைச் செய்யவேண்டாமா! இத்தனை நாள் எனக்கு விஷயம் தெரிந்தும் நான் காட்டிக்கொடுத்தேளு! காட்டிக்கொடுப்பதாயின் என்ரு செய்திருப்பேன்...அதோடு எனக்கும் அந்த லாப நஷ்டமில்லையா! என்னுடைய வாக்கை நான் தட்டமாட்டேன்— என்று மிக்க தைரியமாகக் கூறினுள்.

பிறகு அவர்கள் ஒருவாறு நம்பி "தாரா! நாங்கள் சென்றுவருகிருேம். சொல்லியதை மறக்காதே. தெரிந்ததா! நாங்கள் சாதாரண முட்டாள் என்று எண்ணுதே. எங்களுக்கு எல்லாம் தெரியும். இப்போது உன் மனம் விசனத்தினுல் தத்தளிப்பதால் நாங்கள் அதிக தொந்தரவு செய்யவில்லை. ஜாக்கிரதை" என்று கூறிவிட்டுச் சென்ருர்கள்.

பேதையான தாராவின் மனக்கலக்கத்தைக் கூறவேண்டுமா! ஒருகால் இப்படி நேருமோ என்று அவள் முன்கூட்டி எண்ணியபடியே நடந்துவிட்டதானது தாராவின் மனக்கலக்கத்தை அதிகப்படுத்தியது. ஆகையினுல் இனி தாமதிப்பதால் தனக்கு ஆபத்து நேருமே யல்லாது அனுகூலங்கிடையாது என்கிற எண்ணம் உண்டாகிவிட்டது. அவளுக்கோர் புதிய சக்தியும் உண்டாகியது. உடனே

தன் மனத்திற்குள் எண்ணுததும் எண்ணித் தன் தீர்மானத்தை எவ்விதம் நிறைவேற்றுவதென்று யோசனை செய்து ஓர் முடிவுக்கு வந்துவிட்டாள்.

* * * *

மேலே நிகழ்ந்த சம்பவங்களுக்குப் பிறகு நாட்கள் ஓடி மறைந்தன. அம்ருதலிங்கத்திற்கோ அன்று தாரா சொல்லிய வார்த்தைகள் மனத்தைத் துளைத்துக்கொண்டிருக்கின்றன. எதற்காக அவ்வாறு சொன்னுளோ தெரியவில்லையே! அவளாக சொல்லியனுப்பும்வரை தான் செல்வதும் சரி இல்லை. அங்ஙனம் சென்ருல் அவள் என்ன நினைப்பாளோ என்கிற எண்ணமும் பாதிக்கின்றது.

அவளைப் பார்க்காமல் நாட்கள் கழிவதானது உயிர் போகும் வேதனையாயுமிருக்கிறது. என்ன செய்வான் பாவம்! எப்போது தாராவிடமிருந்து தனக்கு அழைப்பு வரும் என்ற பெரும் ஏக்கங் கொண்டு காத்திருக்கிருன். ஒரு தினம் பகல், பாக்கியம் அமிருதலிங்கத்தினிடம் வந்து அம்மாள் அழைப்பதாகத் தெரிவித்தாள்.

பசியுடனிருப்பவன் ஆகாரத்திற்குக் காத்திருப்பது போல அமிருதம் காத்திருந்தானுதலால் பாக்கியம் இவ்வார்த்தைகளைக் கூறக் கேட்டதும் சந்தோஷத்தினுல் ஒரு துள்ளு துள்ளினுன். உடனே எழுந்து பாக்கியத்துடன் தாராவின் வீட்டிற்கு வந்தான்.

தாரா தன்னறையில் பித்தம் பிடித்தவள் போலப் படுத்துக்கொண்டிருந்தாள். அம்ருதலிங்கம் ஆவலே வடிவாக "தாரா!....தாரா!..." என்று அழைத்துக்கொண்டே உள்ளே சென்ருன். தாரா சடக்கென்று எழுந்து "வாருங்கள்; உட்காருங்கள்"...என்று கூறிவிட்டு ஒரு பத்திரத்தை எடுத்து அமிருதலிங்கத்தின் கையில் கொடுத்துவிட்டு துக்

கமும் சந்தோஷமும் கலந்த ஒரு சிரிப்பு சிரித்துப் பதுமை போல நின்ருள்.

ஒன்றுமே பேசாது ஒரு பத்திரத்தை மட்டும் தன் கையில் கொடுத்தது மிகுந்த ஆச்சரியத்தை யளித்தது. பத்திரத்தைப் பார்க்காமலேயே, "தாரா!...இதென்ன பத்திரம் போல விருக்கிறதே! என்ன விசேஷம் தாரா! இது என்ன பத்திரம்?" என்று ஆவலுடன் கேட்டான். "ஒன்றுமில்லை...இதை படித்துப் பாருங்கள்...பிறகு தானே தெரியும்"...என்று தாரா குயில் போல மொழிந்தாள்.

அமிருதலிங்கம் பத்திரத்தைப் படித்தான். அதிலுள்ள விஷயங்களை அவனுலேயே நம்ப முடியாத அதியாச்சரியத்தை யடைந்து ப்ரமித்துவிட்டான்..."தாரா!...தாரா!... இதென்ன எனக்கொன்றும் விளங்கவில்லையே!...இந்த வீடு உன் பிதாவின் சுயார்ஜிதத்தினுல் சம்பாதித்ததை என் பேருக்கு ரிஜிஸ்டர் செய்து கொடுத்திருப்பது எனக்கு மிகவும் ஆச்சரியமாயும் விளங்காததாயுமிருக்கிறது. தாரா! என்னை சோதிக்காதே! இதன் மர்மத்தைக் கூறு. இவ்வீட்டிற்கு ஒரு விதத்திலும் பாத்யமற்ற எனக்கு இதை பாத்யமாக்கி இருப்பதன் காரணம் என்ன?" என்று ஆவலுடன் கேட்டான்.

இதைக் கேட்ட தாரா அபாரமாய் பொங்கி எழும் துக்கமும், தாங்க வியலாத மனத்தாங்கலும் கூடிய ஓர் உணர்ச்சியுடன் கண்ணீர் ஆருய்ப் பெருகியவாறு கலகலவென்று சோகச் சிரிப்பு ஒன்று சிரித்தாள். தன் பிறவியை எண்ணிக் கட்டுமீறி விசனித்தபடியே அம்ருதலிங்கத்தை ஒரு முறை ஏற இறங்கக் கூர்ந்து கவனித்தாள். மீண்டும் தன் கைகளைப் பிசைந்துகொண்டு ஒருவிதமான பரிதாபத்துடன் அமிருதத்தைப் பார்த்தபடியே "ஆம்...விஷயம்

விளங்காதுதான் ஐயா! நான் இதோ இந்த வீட்டையே-சரீரத்தையே—தங்களுக்கு அர்ப்பணம் செய்ய எண்ணி இருந்தேன். ஆனல்... ஆனல்....என்னுடைய பாழும் பாவப் பிறவி அதற்கு முட்டுக்கட்டையாக இருந்து தடுத்து என் வாழ்நாளேயே பாழ்படுத்திவிட்டது. ஆதலால் இந்த அசையாத வீட்டையாவது தங்களுக்குக் கொடுத்து என் மனமகிழ்ச்சியடைகிறேன்" என்று முடிப்பதற்குள் அமிருதலிங்கம் "ஆ...என்ன! என்ன! நம் விவாகத்திற்கு உன் விதி குறுக்கே நின்று தடுக்கிறதா! தாரா...தாரா!...இம்மொழிகள் என் உயிரைக் குடிப்பதுபோல விருக்கின்றனவே! விளங்கச்சொல்லு...தாரா!...என் கண்மணீ!... என்று மனம் பதைக்க, இதயம் துடிக்க, சோகம் தலைக்கேறி தலை சுழலக் கேட்டான்.

தாரா:—ஆமாம்; ஐயனே! நமது விவாகம் இம்மையில் நடக்கவிடாது தடுப்பது என் விதியேயாகும். என் விதி எப்படி தடுத்தது தெரியுமா!...ஐயோ!...அதைச் சொல்வதற்கே என்னுள்ளம் நடுக்குகின்றது. அன்பரே! முன்பொரு தினம் தாங்கள் தங்களுடைய சரித்திரத்தைக் கூறியது ஞாபகமிருக்கிறதல்லவா!

அமி:—ஆம்! ஞாபகமிருக்கிறது. அதற்கென்ன...நான் பரம ஏழை என்று தெரிவித்தேனே, அதற்குத்தானே...

தாரா:—இல்லை! இல்லை! தங்கள் குடும்பத்தையே ஒரு தீவட்டிக் கொள்ளைக்காரர்கள் அதம் செய்து அல்லகல்லோலப்படுத்தியாகத் தெரிவித்தீர்களே!...

அமி:—ஆமாம்!...அது சென்று எத்தனையோ வருடங்களாய்விட்டதே! அந்தோ! அந்த பயங்கரத்தை—அக்கிராதகச் சண்டாளர்களின் செய்கையை—இப்போது என் நினைக்கவேண்டும்? நினைத்தாலும் அங்கம் அனலாகப் பற்று

கின்றது...அதற்கும் நமது விவாகத்துக்கும் என்ன சம்மந்தம்?...அக் கொடிய சம்பவத்தைக் கேட்டதனுல் உன்மனம் கலங்கிவிட்டதா, அல்லது பயந்துவிட்டாயா!...

தாரா:—ஐயோ...உங்கள் குடும்பத்தைச் சின்னுபின்னமாகச் சிதறவடித்து உங்கள் தந்தையையும், உங்கள் உடன் பிறந்த குழந்தைகளேயும் அஞ்சாமல் கொலே செய்து, உங்கள் செல்வத்தையும் கொள்ளேயடித்துக்கொண்டு, பூர்ண கர்ப்பிணியாகிய உங்கள் தாயாரையும் இம்சை செய்துவிட்டுச் சென்ற கொள்ளேகாரர்கள் யார் தெரியுமா!...என்னேப் பெற்ற பிதாவும், அவரது சகாக்களுமேயாகும்...நான் ஓர் கொலேப்பாதகனின், கொள்ளேக்காரனின், அஞ்சா நெஞ்சம் படைத்த அரக்கனின் மகள்......

அமிரு :—ஆ!....என்ன!...என்ன...உன் பிதா கொள்ளேக்காரரா!...உன் தந்தையா!......தாரா!......இதென்ன என்னே சோதிக்கின்ருயா! வேண்டாம்...வேண்டாம்... சோதிக்கவேண்டாம். மகா சாந்தஸ்வரூபியான உன் பிதாவா கொலே, கொள்ளே செய்தவர்!...இது உண்மையா?

தாரா :—ஐயோ!...கடவுள் மீதாணேயாக இவை உண்மை...என் பிதா ஓர் கொள்ளேக்காரர். நான் அந்த கொலேப் பாதகனின் மகளாகப் பிறக்கும்படியும், என் மனத்தில் ஒரு ஆசையை உண்டாக்கி, அது நிறைவேருது தடுத்து என் வாழ்வையே பாழ்பட்டழியும்படியாகவும் என் விதி செய்துவிட்டது...ஹா!...கொலேப்பாதகனின் வயிற்றில் பிறந்ததொருபுற மிருக்கட்டும். என் பிதாவினுலேயே தங்கள் குடும்பத்திற்கு விளேந்த கேட்டை நினேத்தால் இப்பாழும் உயிரையும் நான் தரித்திருக்கவேண்டுமா?...

அமிரு :—ஐயோ! தாரா!...எனக்குத் தலே சுழலுகின்றதே...என்னே ஏதோ சித்திரவதை செய்கிறதே! நான்

உண்மையில் உன்னெதிரில் நின்று பேசுகிறேனு அல்லது கனவு காண்கிறேனு!...ஹா...இதற்காகத்தான் என்னை வரவேண்டாம் என்று சொல்லிவிட்டாயா!...தாரா!... உன் தந்தையா கொள்ளைக்காரர்...இதை யாரேனும் நம்பு வார்களா! தாரா!...இந்த தீ போன்ற விஷயத்தை உனக்கு யார் சொன்னுர்கள்?

தாரா:—ஐயோ!...இதைக் கேட்ட உங்கள் மனம் பதைப்பதைப்போல ஆயிரம் பங்கு என் மனம் பதறித் தவித்தது....இதுவும் பொய்யாகுமா! என் தந்தை இறந்த அன்று நீங்கள் என்னுேடு பேசிக்கொண்டிருந்தீர்களே! அப்போது என் தந்தையுடன் சில முரடர்கள் பேசிக்கொண் டிருந்ததைத் தாங்கள் மறந்திருக்கமாட்டீர்களல்லவா? தாங்கள் சென்றபிறகு என் தந்தையிடம் நான் அவர்களைப் பற்றிக் கேட்டபோது அவர் வாயினுலேயே அவர் சுய நினைவுடன் எனக்குச் சகல விஷயங்களையும் விளங்கக் கூறி அவர்களும் கொள்ளைக்காரர்கள் என்று கூறினுர்.

அந்தோ! போதுமா! இது ஒருகால் அவர் புத்தி மாருட்டமாகச் சொல்லுகிருரோ வென்று நான் சிறிது சந்தேகித்து உடனே என் பிதாவின் (பிதாவென்று கூறவும் நெஞ்சம் பதறுகின்றது)-கொள்ளைக்காரனின்-பெட்டியைத் திறந்து பார்த்தேன். அப்பப்ப! என் பாழுங் கண்களால் நம்பவே முடியவில்லை. அவர் சொல்லிய அத்தனை கொள்ளை யடித்த சொத்துக்களும், வயிறெரிந்த பொருள்களும் பெட்டி நிறைய இருந்ததைக் கண்டு கொடிய சர்ப்பத்தைக் காண்பதுபோல நடுங்கினேன். என்னையே நான் மறந் தேன்...உடனே என் பிராணன் போய்விடக்கூடாதா வென்றும் ஏங்கினேன். அன்றே தந்தையும் இறந்தார். என் மனம் உடைந்துவிட்டதால் ஒன்றுமே தோன்ருது

குழம்பினேன்.

அமி :—உன் தந்தையே சொன்னரா!...இதென்ன ஆச்சரிய சம்பவம்! தாரா! நீ இதை நம்புகிருயா!...இது உண்மை தான் என்பதற்கு பொருள்கள்மட்டுந்தானே ஆதாரம்?...

தாரா:—ஊம்...என்னைப் பெற்றவர் ஆதியிலேயே என்னையோர் கொள்ளைக்காரனின் பெண்ணுக வளர்க்காமல் உண்மை செல்வவந்தரின் மகள்போல வளர்த்துவந்ததால் கல்வியறிவை ஊட்டினர். அதைக்கொண்டு நான் அவர் பெட்டியில் முற்றும் சோதனை போட்டேன். திருட்டிலும் இது மிகவும் நூதன முறையில் இன்ன தேதியில், இன்ன இடத்தில், இன்னர் வீட்டில் கொள்ளையடித்தது; அதில் ஆளுக்குக் கிடைத்த பங்கு இத்தனை. கொள்ளைக் கூட்டத்தின் தலைவராகையால் இவருக்குக் கிடைத்த பங்கு இத்தனை. இன்னரைக் கொலை செய்தது, இன்னரை கற்பழித்தது...அப்பப்ப...என் வாயினல் சொல்லவும் மனம் கூசுகிறது.

இத்தனை விவரங்களையும் பல கடிதங்கள், குறிப்புகள் மூலம் படித்துத் தெரிந்துகொண்டேன். இன்னும் சாட்சி வேண்டுமா! அவைகள் எல்லாம் ஒன்றுகூடி என்னைக் கொன்று வாட்டிவிட்டன. அந்த கலக்கத்திலிருக்கையில் தான் நீங்கள் சாப்பாடு கொண்டுவந்தீர்கள். என்னுள் செய்துகொண்ட தீர்மானத்தை நிறைவேற்றிய பின்னர் இதைத் தங்களுக்குத் தெரிவிக்கவே நான் அப்போது அவ்வாறு உரைத்தேன். தாங்கள் அதை மன்னிக்கவேண்டும்... நான் நினைத்தபடியே கள்ளர்கள் அன்றே வந்து என்னை மிரட்டினர்கள். (நடந்ததைக் கூறி), அவர்களுக்கு இம் மாதிரி தந்திரம் சொல்லியனுப்பினேன்.

அமி:—ஹா!...கள்ளர்களா வந்து உன்னை பயமுறுத்தி

ஞர்கள். என்ன அநியாயம்! நீ எப்படி தைரியமாக இம் மாதிரி பதில் தெரிவித்தாய்? தாரா! அந்தோ! அவர்கள் திரும்பி வந்துவிடமாட்டார்களா!

தாரா:—ஐயா! அவர்கள் திரும்பிவரும் வழியில் அவர்களை நான் வைக்கவில்லை. அவர்களை தந்திரமாக அனுப்பி விட்ட பிறகு என்னுடைய நம்பிக்கையான வேலைக்காரனைக் கூப்பிட்டேன். அவனும் என் தந்தையினுல் காப்பாற்றப் பட்ட ஓர் கள்ளனுகையினுல் உளவறிந்தவன். தீவற்றிக் கொள்ளை நடக்கும் காலத்தில் அவனும் கூட இருந்தவனும். அதனுல் பல இடங்களில் கொள்ளையடித்தது அவனுக்குத் தெரியும். ஆகையினுல் அவனை அழைத்து சகல விவரங்களையும் கூறினேன். அவனிடம் பணத்தைக் கொடுத்து முன்பு யார் யார் வீட்டில் கொள்ளையடித்தார்களோ அவர்கள் எல்லாம் அந்தந்த இடங்களிலேயே இருக்கிருர்களா, மாறி விட்டார்களா அல்லது அவர்கள் சந்ததியார்களாவது இருக்கிருர்களா வென்பதை தீரமாக விசாரித்துக்கொண்டு வரும்படியாக அனுப்பினேன்.

அமி:—ஆ!....தாரா!...என்ன அதிசய சம்பவம் இது! உம். பிறகு...

தாரா:—அவன் ஆங்காங்கு சென்று அலைந்து திரிந்து புலன் விசாரித்துக்கொண்டு வந்து, சிலர் இடம் மாறி இருப்பதாயும், சிலர் மறைந்துவிட்டதால் சந்ததியார் இருப்பதாயும், பின்னும் சிலர் பூண்டோடு அதமாகிவிட்டதாயும், சிலர் சென்ற இடமே தெரியாது போய்விட்டதாயும், சிலர் இந்த கொள்ளைக்கூட்டத்தினர் செய்த அட்ட காஸத்தினுல் பித்தம் பிடித்து தெருவில் அலைவதாயும், பின்னும் சிலர் அதே ஏக்கத்தினுல் நோய்வாய்ப்பட்டு வருடக்கணக்கில் தேருது முடங்களாகிவிட்டதாயும் இவ்

விதம் பலவிதமாகத் தெரிவித்தான்.

என்னிதயம் துடிதுடித்தது ; அப் பொருள்கள் இங்கிருப்பதானது ஏதோ கொடிய தேள், பாம்பு, நெருப்பு முதலியன இங்கிருப்பதாகவே நினைத்தேன். உடனே ஒரு கடிதம் எழுதினேன். இதோ அதன் நகலைப் படியுங்கள்—என்று அமிருதலிங்கத்தின் கையில் கொடுத்தாள். இதைக் கேட்ட அமிருதம் கட்டு மீறிய அபாரமான ஆச்சரியத்துடன் கடிதத்தை வாங்கிப் படிக்கலானான்.

"அன்புமிக்க ஐயா! அம்மா!

காலச்சக்கரம் மாறிக்கொண்டே இருக்கின்றதேயன்றி ஓரிடத்தில் நிற்காது. உங்களுடைய காலச் சக்கரம்..............வருடத்திற்கு முன்பு கொடிய மாறுதலுடன் சுழன்றதன் பயனாக நீங்கள் உங்கள் சொத்துக்களை, அங்கங்களை, மக்களை, வீட்டை—ஒவ்வொருவர் ஒவ்வொன்றை—கொடிய தீவற்றிக்கொள்ளைக்காரச் சண்டாளர்களால் இழந்துவிட்டீர்கள். அக் காலம் மறைந்து பல்லாண்டுகள் கழிந்தன. நீங்கள் இழந்துவிட்ட அங்கங்களையோ, வீட்டையோ மக்களையோ......முழு பொருளையுமோ இனி அடையமுடியுமென்று சொப்பனமும் காணமாட்டீர்கள். அடையவும் முடியாது...ஆனால் காலச் சக்கரத்தின் மாறுதலில் நீங்கள் இழந்த செல்வத்தில் ஒரு சிறிது மட்டும் மீண்டும் பெறும் நற்காலமாக இப்போது கடவுள் அமைத்திருக்கிறார். இம் மாதிரி பெற்றிருப்பது ஓர் செப்பிடு வித்தையோ, கண்கட்டு ஜாலவித்தையோ, யக்ஷிணி முதலிய தேவதையின் விளையாட்டோ என்று நீங்கள்

பயப்படவேண்டாம்...இது உங்கள் சொந்த சொத்தேயாகும். உங்கள் வீட்டில் கொள்ளை யடித்த சண்டாளர்களில் ஒருவனின் வயிற்றில் மகா கொடிய பாவத்தைச் செய்து நான் பிறந்து விட்டதால் இந்த பாவ சரீரத்தை உங்கள் வயி றெரிந்த சொத்திலுலேயே இதுகாறும் வளர்த்து விட்ட பாபம் பரிகாரம் ஆகும் பொருட்டு இவை களைத் திருப்பி யனுப்புகிறேன். இந்த விவரங் களைத் தாங்கள் தயவுசெய்து பகிரங்கப்படுத்த வேண்டாம். உங்களுக்கு சொத்து சேர்ந்த சந்தோஷத்துடன் திருப்தியடையுங்கள். நான் யார் என்பதை நீங்களறிய விரும்பவேண்டாம்.

இங்ஙனம்,
கள்ளனின் மகள்,
மகா பாவி..."

இதைப் படித்ததும் அமிருதலிங்கத்திற்கு மயிர் சிலிர்த்தது. ஆனந்தம் தானுகப் பெருகியது. "தாரா! தாரா! என் மனம் என்னை மீறி ஓடுகின்றது. நான் என்ன சொல்வதென்றே தெரியவில்லை..." என்று தவித்தான்.

தாரா :—ஊம்...ஐயோ! நான் அக்காலையில் ஒன்றும் அறியாதிருப்பினும் தங்கள் குடும்பம் எத்தகைய அல்லகல் லோலப்பட்டு நிர்மூலமாகிவிட்ட ஒரு சம்பவத்தைத் தாங்கள் கூறும்போது என் மனம் தவித்த தவிப்பை கூறத் திறமன்று. அப்பாதகர்கள் அகப்பட்டால் நானே வெட்டி வீழ்த்திடுவேன் என்றும் எண்ணினேன். அந்தோ!.... அச் சண்டாளன் என் பிதாவே என்று அறிந்ததும் என் மனம் எப்படித் தத்தளித்திருக்கும்? உங்கள் குடும் பத்தை யழித்ததுபோன்று இன்னும் எத்தனை குடும்பங்

களை யழித்து பாழ்படுத்திய பாதகனே இவன்...என்று தான் எண்ணினேன். பெற்ற பிதாவென்கிற பாசமும் மறைந்தொழிந்தது...கடவுளே சீக்கிரம் கொண்டு போய் விட்டார். அப்படி இறக்காது பிழைத்துக்கொண்டிருந் தால் தக்ஷணமே நான் என் பிதாவென்றும் பாராமல் போலீஸாரிடம் பிடித்துக் கொடுத்திருப்பேன்.

ஊம்...நான் மகா பாவியாகையினால் இங்கு பிறந் தேன். எத்தனை பேர்களின் தகவல் கிடைத்ததோ அத்தனை பேருக்கும் உள்ளே இருந்த சகலமான பொருள்களையும் அத்தனை பாகம் செய்து அவற்றுடன் இக் கடிதமும் ஒன்று வைத்து எல்லோருக்கும் அதே ஆள்மூலம் அனுப்பி விட் டேன். இரும்புப்பெட்டி காலியாகிவிட்டது. அதன் பிறகே என் மனம் நிம்மதியுற்றது. என் ஸ்வாஸம் சரியாக வரத் தொடங்கியது.

அன்பரே! இன்னொரு விஷயம். மற்ற எல்லோருக்கும் ஆள்வசமனுப்பிவிட்டேன். ஆனால் தங்கள் தாயாருக்கு மட்டும் மகா பாவி நானே நேரில் ஆசிரமத்திற்குச் சென்று அப்புனிதவதியின் காலில் விழுந்து வணங்கி அக்கள்ளனின் புதல்வி நானே என்பதையும், என் வயிற்றெரிச்சலையும் தெரி வித்துக் கதறினேன்.

அமிரு:—என்ன! என்ன!...தாரா! என் தாயாரை நீயே நேரில் கண்டாயா...இதென்ன ஆச்சரியம்....நமது காதலைப் பற்றியும் தெரிவித்தாயா! என் தாய் என்ன சொன்னாள்?

தாரா:—ஆகா! நான் அதற்குப் பாக்கியம் செய்திருந் தால் நல்ல உத்தமமான ஓர் யோக்யனின்—ஏழையின்— வயிற்றில் பிறந்திருக்கமாட்டேனே! நான் அதிர்ஷ்ட ஹீனை...ஆகையினால் அதை வெளியிடவில்லை. மாமியாக அடைந்து மனமகிழ எண்ணியது பாழாகிவிட்டதாலும்,

அப் புண்ணியவதியை நேரிலேயே கண்டு தரிசிக்கவேண்டி என்மனம் பதறியதாலும் சென்றேன்; தரிசித்தேன்.

அந்தம்மாள் என்னைக் கண்டதும் நானும் ஆசிரமத்தில் சேருவதற்காக வந்திருப்பவள் என்று எண்ணினார்கள். நான் பழைய கொள்ளை விஷயத்தை எடுத்ததும், அந்தோ! உங்கள் தாயார் தன்னிரையழிந்து மூர்ச்சித்துவிட்டார்கள். அப்போதுதான் அச் சம்பவம் நடப்பதுபோல அத்தனை துன்பம் உண்டாகிவிட்டது. பிறகு நானே தேற்றி அம்மாளுக்கு மூர்ச்சை தெளியச் செய்தேன். நான் அக் கொள்ளைக்காரனின் மகள் என்று விஷயங்களைக்கூறியதும் அந்தம்மாள் பிரமித்தார்கள். வியப்புக் கடலில் மூழ்கினார்கள். ஏதேதோ சொன்னார்கள்....அதற்குமேல் என்னால் நிற்கவே முடியவில்லை. விடைபெற்றுக்கொண்டு வந்துவிட்டேன்.

நேற்று காலையில் அடுத்த தெருவிலுள்ள போலீஸ் சூப்ரின்டென்டெண்டு புருஷோத்தமரை அழைத்து வரச் செய்தேன். அவர் வந்த உடனே நான் ஒரு விஷயத்தைக் கூட ஒளிக்காமல் எல்லாவற்றையும் சொல்லி "ஐயா! நான் முதலிலேயே ஏன் தெரிவிக்கவில்லை என்று நீங்கள் கேட்கலாம்....அப்படி நான் தெரிவித்திருந்தால் என்னுடைய மனோரதம் நிறைவேறாதோ என்கிற பயத்தினால் நான் என் மனோபீஷ்டப்படிக்கு அப் பாதக சொத்துக்களை சொத்துக்காரர்களிடம் சேர்ப்பித்துவிட்டுப் பிறகு தெரிவித்தேன். இன்று இரவு அந்த கள்ளர்களை இங்கு வரும்படிக்குச் சொல்லி இருக்கிறேன். அவர்களைப் பிடித்துக் கொடுத்து விடுகிறேன்...நான் முன்னதாகவே தெரிவிக்காது செய்ததால் குற்றமிருப்பின் நானும் தண்டனைக்குள்ளாகத் தயாராகவிருக்கிறேன். இனி இக் கட்டை—கொள்ளைப் பொருளால் வளர்ந்த இப்பாழும் ஊனுடல்—

எவ்விதமானுல் என்ன? எவ்விதமாவது காலங்கடக்க வேண்டும்'' என்று கூறினேன்.

இதைக் கேட்ட அவர் மிக மிக ஆச்சரியப்பட்ட துடன், என் தந்தை இதுகாலபரியந்தம் ஒருவிதமான சந்தே கத்திற்கும் இடங்கொடுக்காமல் நடந்துகொண்டதற்கு வியப்புற்ருர். கல்யாணத்திற்கு நிச்சயதார்த்தம் செய்வ தற்கு அக்கள்ளர் கூட்டம் முற்றிலும்வரும்படி நேற்று இரவு எழுதி இருந்தேன்.

எல்லோரும் புஷ்பமாலைகள் ஆடையாபரணங்கள் சகி தம் நிச்சயதார்த்தம் செய்ய வந்தார்கள். "இன்னும் யாரே னும் வரவேண்டியது பாக்கியுள்ளதா! ஆரம்பிக்கலாமா?'' என்று நான் கேட்டேன். "இனிமேல் யாரும் பாக்கி இல்லை. சிலர் வெளியூரில் இருக்கிறுர்கள். அவர்கள் கல்யாணத் திற்குத்தான் வருவார்கள்'' என்றுர்கள்.

எனக்குப் பிதா ஸ்தானத்தில் இருந்து நடத்த யார் தகுதியுடன் முன்வருகிறீர்கள்...அப்படி முன்னே வருகிற வர்கள் இதுகாறும் என்பிதா இருந்ததுபோலவே கவுரவ மாக நடப்பவர்களாக இருக்கவேண்டும்'' என்றேன். அதில் ஒருவன் முன்னுல் வந்தான். யாரை மணப்பது என்ற போட்டி வந்தது. நான், நீ...என்று சிலர் சண்டையிட்டுக் கொண்டார்கள்.

அதுவரையில் இவ் வீட்டுக்குள் ஒளிந்துகொண்டிருந்த போலீஸ்காரர்கள் குபீரென்று பாய்ந்து அத்தனை பெயரை யும் வளைத்துக்கொண்டார்கள். உடனே ஒருவர் தப்பியோட முடியா வண்ணம் அவர்களுடைய காலில் குறி பார்த்துச் சுட்டுவிட்டார். அவர்களுக்கு என்மீது வந்த கோபத்திற் கோர் எல்லையே இல்லை. என்னையும் கைது செய்வதுபோல விலங்கிட்டு அவர்களுடன் கூடவே நிறுத்தினுர்கள்...

அமிருதம் பரபரப்பும் ஆத்திரமும் பொங்க "உன்னையா கைதுசெய்தார்கள்! ஐயோ! நீ எப்படி தப்பினாய்?" என்று கேட்டான்...தாரா மிகவும் விசனத்துடன் "ஐயா! என்னைக் கைது செய்தால் என்ன? தீவாந்திரத்திற்குத்தான் அனுப்பினால் என்ன? அல்லது என் தந்தை செய்த கொலைகளுக்காக அவர் உதிரத்தில் பிறந்து அக் கொள்ளைச் சொத்தில் ஊனை வளர்த்த என்னைத் தூக்கிலிட்டுவிட்டால்தான் என்ன? என்னுடைய எதிர்கால வாழ்க்கையின் கண்ணாடி உடைந்து பொடித்துவிட்ட பின்னர் எனக்கு எதுவும் ஒன்றாகத்தான் இருக்கிறது. எது செய்தாலும் சர்வ சந்தோஷமாகவும், எனக்கது தக்க பிராயச்சித்தமாகவும் ஏற்றுக்கொள்வேன்.

ஐயா! இனி என் வாழ்க்கையை எப்படி நடத்துவதென்று முதலிலேயே தீர்மானித்துக்கொண்டுதான் நான் மேற்படி காரியங்களை ஆரம்பித்தேன்; ஒருவாறு முடித்தேன். அவர்களைக் கைதியாக்கிக்கொண்டு போய்விட்டார்கள். அந்த போலீஸ் அதிகாரி மிகவும் நல்லவர். கடவுளிடத்தில் அத்தியந்த பக்தியும் நம்பிக்கையும் கொண்டவர். நியாயத்திற்கு விரோதமாக ஒருபோதும் நடவாத உத்தமர். தன்னால் கூடியவரையில் பரோபகாரம் செய்வதையே நோக்கமாகக் கொண்டவர். மகா உத்தமர். தயாளசீலர். அவர் தமது போலீஸ் உத்தியோகத்தில் வெகு அக்கரையாகவும், நீதியுடனும், லஞ்சம் முதலியன வாங்காமல் ஒழுங்கான முறையில் வேலை செய்து அதிகாரிகளின் அன்பும் பேராதரவும் அபாரமாகப் பெற்றவர். கனவிலும் பிறருக்குத் தீங்கு நினைக்காதவர். அத்தகைய உத்தமரின் உதவியைக் கடவுள் எனக்குக் காட்டியதன் பயனால் என் வேலையும் முடிந்தது. இவ்வீடுதான் எஞ்சி நின்றது. அப் பெரியாரின் ஆதரவால் ஒரு வக்கீலைக்கொண்டு இதை

தங்கள்பேரில் எழுதி நேற்று பகலே ரிஜிஸ்டர் செய்தேன்.

ஐயா! என்னுடைய புதிய சரித்திரம் இவ்வளவுதான். இம்மாதிரி ஓர் சரித்திரம் என்னுடைய வாழ்க்கையில் மறைந்திருந்ததென்பதையறியாது துள்ளினேன்; மனக்கோட்டை கட்டினேன். எல்லாம் இடிந்து விழ்ந்தது. நடைச்சவம் போலானேன். தற்கொலையைப்போன்ற பாபம் உலகத்தில் ஒன்றுமே இல்லை என்பதைப் படித்திருக்கிறேனாகையினால் அந்த பாவத்தையும் விலைக்கு வாங்க நான் பிரியப்படவில்லை. இப்பாழும் சரீரம் பிறர்க்கே உழைத்து பொதுஜன சேவை செய்து அதன் மூலமாகவேனும் பரகதிக்கு நல்லதைத் தேடிக் கொள்ளலாம் என்று துணிந்துவிட்டேன்.

இனி நான் இங்கிழலில், இப் பாழும் வீட்டிலிருக்கச் சகியேன்...இவ்வித விவரங்களைத் தங்களுக்குத் தெரிவித்து விட்டுப் பிறகு இதோ இக் காவி யாடை யணிந்து வெளிக் கிளம்ப நினைத்தேன். அதுவும் முடிந்தது...என் வாழ்நாளில் தங்கள் தரிசனமும் இதுவேகடைசியென்று நினைக்கிறேன்...

“ஹா!....இதென்ன....தாரா.. .தாரா....உன் தந்தை செய்த அக்கிரமத்திற்கெல்லாம் நீ பாத்யப்பட்டவளா! ஐயோ! இவ்வுலகில் நீ செய்ததுபோல இம்மாதிரியான ஆச்சரிய சம்பவத்தை இதுவரையில் மக்கள் கேட்டும் இருக்கமாட்டார்கள். இனியும் கேட்கப் போவதில்லை. அத்தகைய அருமையான உயரிய காரியத்தை இளஞ்சிறுமியாகிய நீ—உலகம் வியக்கும் வண்ணம் செய்து முடித்த நீயா—இத்தகைய யோசனை செய்வது?...என் கண்ணே! தாரா!...தாரா! இம்மாதிரி சொல்லாதே”...என்று அமிருதம் கூறியபடியே தாராவின் கையைப் பிடித்துக்கொண்டான்.

தாரா:—(கண்ணீர் ஆறுய்ப் பெருகியவாறு)...ஐயோ! மகா கொடிய பாவியாகிய என்னை—உங்கள் அருமை பிதா

வைக் கொலைசெய்த கொலைப்பாதகக உதிரத்தில் ஜெனித்த கொடும்பாவி என்னை, உங்கள் குடும்பத்தையே ஹதம் செய்த சண்டாளனின் வயிற்றில் பிறந்த என்னை—இனியும் நீங்கள் கண்ணே என்று அழைப்பது தகாது; தகாது... அது சிறிதும் தகாது...அண்டறியாத பாபத்தைச் செய்த சண்டாளி எனக்கு இம்மையில் இது ஒரு சிறிதும் தகாது. இனி நான் அனாதை...ஒண்டிக்கட்டை. நாயினும் கேடு கெட்ட எனக்கா இனி அச் சொல் உரியது...இல்லை... இல்லை...நான் இன்றே வெளிக்கிளம்பப் போகிறேன்...

அம்ரு :—(இடை மறுத்து)...தாரா!...என் காதல் கனியே! இச்செய்கைகளுக்கு நீ யொருபோதும் பாத்யப் பட்டவளல்ல. உன் பிதா செய்ததற்கு நீ உடந்தையாக இருந்து செய்திருந்தாலும் ஒருவாறுசொல்லலாம். அக்காலத் தில் நீ பிறக்கவே இல்லை. அச் சம்பவங்கள் நடந்து கால் நூற்றாண்டு ஆகிவிட்டது. என் கண்மணியே! நான் உன்னை விடமாட்டேன். கொடிய இரண்யன் வயிற்றில் பிரகலாதன் பிறந்ததுபோல அப் பாதகச் செயல் புரிந்தவரின் வயிற்றில் நீ பிறந்தாய். பிரகலாதனால் இரண்யனுக்கும் மோக்ஷம் கிடைத்தது. அப் பாதகச் சொத்துகளைத் திருப்பிக் கொடுத்த மகத்தான உத்தமச் செய்கையினால் உன் பிதாவின் பாபமும் பரிகாரமாகியதாகக் கூறலாம்.

கண்ணே!.. என் இன்ப வடிவே...ஈடிலாக் கற்ப கமே! உன்மீது ஒரு குற்றமுமில்லை. நாங்கள் செய்த பாவத்தை நாங்கள் அனுபவித்தோம். அதற்கும் இதற்கும் சம்மந்தமே இல்லை. உன் மனத்தை நீ அம்மாதிரி திருப்பி விடக்கூடாது...நான் கட்டாயம் உன்னை விடமாட்டேன்... அன்பே!...புலம்பாதே!...என்று அவளைத் தழுவியவாறு கண்ணீரைத் துடைத்தான்.

தாரா :—ஐயா !.... இது சற்றும் பொருந்தாது. தெய் வத்திற்கும் அடுக்காது. உங்கள் பிதாவைக் கொன்ற பாத கத்தை ஏழேழு ஜென்ம மெடுத்தாலும் மறக்க முடியுமா ? முடியவே முடியாது. அந்தோ ! உங்கள் தாயாரின் மனத் துயரத்தை நான் நேரில் கண்ட காட்சி என் மனத்தைவிட்டு மாறவில்லையே !... தன் பதியைக் கொலை செய்த பாதகனின் மகள், தன்னருமைக் குழந்தைகளைக் கொலை செய்த கிராத கனின் மகள், தன் இணையற்ற இன்ப வாழ்க்கையைச் சிதறவடித்த சண்டாளனின் மகள், தன்னுரிமை பொருந்திய பொருள்களைக் கொள்ளையடித்த அஞ்சா நெஞ்சம்படைத்த வஞ்சகத் துரோகியின் மகளாகிய என்னை மருமகளாக ஏற்க அவ்வுத்தமியின் இதயம் துடிதுடித்து தத்தளிக்காதா !

சாமான்யமாக மன்னிக்கக்கூடிய குற்றவாளியின் மகளா நான் ? இல்லை... இல்லை...... மன்னிக்கவோ,... மறக் கவோ முடியாது... என்னை விட்டுவிடுங்கள்.... என் வாழ் நாளில் ஒரு ஜென்மம் மகிழ்ச்சிகரமாக முடிந்தது. மறு பிறவி துன்பக்கடலில் அகப்பட்டுத் துளைந்து முடிவடைய வேண்டும். அது ஆரம்பமாயிற்று.

ஐயனே !... இப்பாவியை விட்டுவிடுங்கள். நான் எங் காவது கண் மறையத் தொலைந்துபோய் இச் சரீரத்தை கடத்துகிறேன். இதுதான் எனது முடிவு—என்று கூறிய படியே தாங்கமாட்டாத கட்டு மீறிப் பொங்கிஎழும் விச னத்தால் அப்படியே மூர்ச்சித்துத் துவண்டு விழுந்தாள்.

அதிகாரம்—7

அம்ருத தாரையோ! ஆனந்த வெள்ளமோ!

கரை காணாத காதல் வெள்ளத்தில் களிப்புற எண்ணிய நங்கையின் வாய்மொழியைக் கேட்டதும் அமிருத லிங்கம் கதி கலங்கிவிட்டான். தான் என்னவிதமாக இவளைத் தேற்றி தெளிவு பெறச் செய்வதென்று தோன்றாமல் விழித் தான். விசனமோ தாங்க முடியவில்லை....தாராபாய் செய்த அதியாச்சரியமான காரியத்தை எண்ண எண்ண அவன் இதயம் அவனை வியப்புக் கடலாடிப் பூரித்து மெய்மறக்கச் செய்கின்றது.

தாராபாயைத் தூக்கி தன் மடியில் போட்டுக்கொண்டு முகத்தில் ஜலம் தெளித்து விசிறி, பாக்கியத்தின் உதவி யினால் ஆகாரம் சிறிது பருகச் செய்தான். 10 நிமிடம் சென்று கண்ணைத் திறந்த தாரா, தான் தன்னாருயிர்க் காத லனின் மடியிலிருப்பது கண்டு அலறி யடித்துக்கொண்டு எழுந்தாள்...“ஐயா! நேரமாகிவிட்டது...சென்று வாருங் கள்...எனது நமஸ்காரங்கள்...பாக்கியம்!...என்னுடன்கூட வருவதற்கு நீ பிரியப்பட்டால் கிளம்பு. இல்லையேல் எப்படி யாவது பிழைத்துப் போ!” என்று தன்னை மீறிதைரியமாகக் கூறிவிட்டு, விசனம் நிறைந்த துணிபுடன் விலகி நின்றாள்.

அமி:—(மிகவும் பரிதாபகரமாய் கெஞ்சியபடியே கண் ணீர் வழிந்தோட தாராவின் எதிரே சென்று) தாரா! தாரா! ...நீ இம்மாதிரி தீர்மானம் செய்வதை நான் சகிக்க மாட் டேன். நீ குற்றமற்ற குணக் குன்று, பரிசுத்தமான நிர பராதி, களங்கமற்ற காரிகை என்பதை என்னிதயம் பரி பூரணமாக நம்புகிறது. ஆகையினால் நீ ஒருவித மாறுதலும்

இன்றி வாழ்க்கை நடத்தலாம். உன்னை வெறுப்பதும் விலக்குவதும், விரும்புவதும், அடைவதும் என்னுடைய வேலையல்லவா! என் மனச்சாட்சி உன் பரிசுத்தத்தை அறிந்திருக்கையில் நீ ஏன் வீண் கவலையும் மன மாற்றமும் கொள்ளவேண்டும்?

கண்மணீ! தாரா!...எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு இழந்த சொத்தை மீண்டும் அடைந்த சந்தோஷத்திற்கு மாருக, என் விலையிலா மாணிக்கமாக நம்பி என் வாழ்நாளுக்கேஓர்ஜீவாதாரமாக எதிர்பார்த்திருந்த உன்னைஇழந்துவிடுவது இரட்டிப்பு விசனத்தையன்ருே அளிக்கின்றது!

தாரா!...நீ உன் எண்ணத்தை மாற்றிக்கொள்ளமாட்டாயா! இதுதான் உன் உறுதியான தீர்மானமா?....அப்படியாயின் என்னுடைய தீர்மானத்தையும் இனி வேருக மாற்றிவிடுகிறேன். என் வாழ்நாளில் பட்ட துன்பத்தை யெல்லாம் மறக்கடிக்கும் மதிமுகத்து மங்கையாகிய உன்னையே இழந்தபிறகு இனி எனக்கு என்னசந்தோஷம் வேண்டும்?... எப்படி உண்மையான சந்தோஷம் உண்டாகும்?

கண்ணே! எங்கள் செல்வங்கள் கொள்ளைபோனுலும் எங்களுக்கு ஆகாரம் ஊட்டுவது உன் பிதாவின் சிபார்சேயாகும். அதுவும் உன் முயற்சினுலேயே கிடைத்தது. சந்தோஷமற்ற வாழ்க்கையை என் மனம் மட்டும் விரும்புமா! ...ஒருக்காலும் விரும்பாது. உன்னேடு நானும் ஓர் துறவியாகி உன் சகோதரன் போன்று கூடவிருந்து பொதுநல சேவை செய்து என் வாழ்நாளைக் கடத்துகிறேன். என் தாய் ஓர் துறவி...மனைவியாக பகிரங்கமாக மாலையிடாவிடினும் மனமாறக் காதலித்த மனைவியோர் துறவி. நானும் ஓர் துறவியே யாகிவிடுகிறேன்....எனக்கும் மற்ற உலகப் பற்றுதல் வேண்டாம். அதற்காவது சேர்த்துக்கொள்வாயா,

மாட்டாயா''....என்று கதறிவிட்டான்.

அச்சமயம் அவனை யாரோ கட்டித் தழுவியதுபோல விருந்தது. உடனே திரும்பிப் பார்த்தான். தன்னுருயிர் அன்னை தாரைதாரையாய்வழியும்கண்ணீருடன் அலங்கோல மாக தன்னைத் தூக்கி நிறுத்திக் கட்டிக் கொண்டபடியே தாராவையும் அவனுடன் சேர்த்து அணைத்துக்கொண்டு பேசவே முடியாது தடுமாறித் தம்பித்துத் திணறிநின்ருள்.

திடீரென்று ஓர் ஜோதி தோன்றுவதுபோலத் தன் தாயார் இங்கு வந்து இருவரையும் ஏக காலத்தில் கட்டித் தழுவிக்கொண்டு நிற்பதைக்கண்ட அமிருதலிங்கத்திற்குஒன் றுமே தோன்ருமல் ப்ரமித்துவிட்டது. தாராபாயும்அந்தம்மா ளின்செய்கையைக்கண்டு தன்னைமீறிய வியப்பும்திகைப்பும் ஒருவிதமான பயமும் நடுக்கமும் உண்டாகி விழிக்கிருள்.

இவர்களுடைய நிலைமையைக் கண்ட நீலாம்பிகை யம்மாள் சில விநாடிகள் ஊமையானுள். பிறகு ஒருவாறு தேறுதல் செய்துகொண்டு "என்னுருயிர் செல்வங்களே! தாராபாய் !...அமிருதலிங்கம் !...இன்றே என் ஜென்மம் சாபல்யமாகியது. என்மனச்சந்தோஷத்தின் உச்ச நிலையைச் சொல்வதற்கே முடியவில்லை.

தாரா !...என்னிடம் பொருளைக் கொடுக்கும்போது இந்த ரகஸியங்களை அப்படியே ஒளித்துவிட்டாயே!... ஆஹா!...இத்தகைய அதிசய சம்பவங்களும் உலகத்தில் நடக்குமா! உலகமே மெச்சி வியக்கும்படி நடத்திக் காட்டிய நீயா எங்களைவிட்டு விலகுவது? நீயா எங்களை மோசம் செய்வது?

என் செல்வங்களே!...நான் இங்கு நடந்த சகல சம் பாஷணைகளையும் கேட்டுக்கொண்டே இதோ இக் கதவருகி லேயே நின்றிருந்தேன். நான் எதிரில் வந்தால் சம்பாஷணை

நின்றுவிடும் என்று வரவில்லை...அமிருதம்! நான் முதலில் உன் வீட்டிற்கு வந்து கிழவரிடம், பணம் கிடைத்த விஷயத்தைச் சொன்னதும் அவருக்குண்டான ஆச்சரியத்திற்கு எல்லையே இல்லை. ஆனால் தாராதான் அக் கள்ளனின் மகள் என்று அவருக்கு இன்னமும் தெரியாது. 'அமிருதம் எங்கே?' என்றேன். இந்த விலாசத்திற்குப் போகச் சொன்னார். இங்கு வந்து தூரவிருந்து உன்னை பார்க்கும்போது திடுக்கிட்டுப் பிரமித்து மெய் மறந்தேன்.

உங்கள் இருவருக்கும் ஏதோ சம்பாஷணை நடப்பதை அறியவே மறைந்தேன். எல்லாம் வெட்டவெளியாகி விட்டன. அபூர்வ சக்தி பொருந்திய தாராபாய்! 'உம் தாயார் என்னை ஏற்கவேமாட்டாள்' என்று கூறினாயே!... அதை நான் மறுக்கிறேன். என் குழந்தை சொல்லிய பிரக்லாதன், இரண்யன் என்ற உதாரணம் மிக மிகப் பொருத்தமானது.

என் செல்வ ரத்தினமே!...தாராபாய்!...இக்கலியுகத்தில் மக்கள் கண்டு, கட்டுமீறி அபாரமாக வியப்புற்ற அதிசயம் ஒன்றே ஒன்று உண்டு. அதை நீயும் அறிந்திருப்பாய். அதாவது தேசபந்து சித்தரஞ்சன தாஸ் (ஸி. ஆர். தாஸ்) தன் தந்தை பட்ட கடனைத் தான் சம்பாதித்து வட்டியுடன் திருப்பிக் கொடுத்த அதியாச்சரிமான சம்பவத்தைக் கேட்டோம்.

இப்போது உன் தந்தை கொள்ளை யடித்து துராக்ருதமாகப் பறித்த பொருள்களை நீ திருப்பிக் கொடுத்த அதிசய சம்பவம் இருக்கிறதே, இது அதைவிட உயர்ந்து ஒரு படிக் கட்டு ஏறிவிட்டதென்றே கூறலாம். அத்தகைய உத்தம லக்ஷணகுணம் படைத்த உன்னையாவெறுப்பது?...என்விதி அது. அக்காலச் சக்கரத்தின் ஆட்டத்தை அனுபவித்தேன்.

இதற்கு நீ ஒருநாளும் பந்தப்பட்டவளாகவேமாட்டாய்.

இன்னும் கேட்டால் உன் தந்தையின் செய்கையினுல் சிதறுண்டு தவிக்கும் எங்களுடைய மனத்திற்கு நீயே சதா சந்தோஷத்தைக் கொடுத்து துயரத்தை ஆற்றக் கடமைப்பட்டிருக்கிருய் என்பதை மறக்காதே...கண்மணீ! தாரா!...உன் தந்தை கொள்ளை யடித்த அநியாய சொத்துக்கள் மறைந்துவிட்டன. இப்போதுள்ள இச் சொத்துக்கள் காதலனின் சொத்தாகும். இனி இதற்கு நீயே உரித்தானவள். இனியும் எங்களை சோதிக்காதே! எங்கள் கஷ்டகாலம் விலகி சந்தோஷ சூரியன் உதயமாகட்டும்.

தாரா!...உன் பிதா உங்கள் விவாகத்தை நடத்திய பிறகு உயிர் துறந்திருந்தால் அப்போ என்ன செய்வாய்! உன் கணவனை விட்டுப் போய்விடுவாயா! அம்மாதிரி, உங்களுக்கு மானஸீகமாக விவாகம் நடந்ததாக நினைத்துக் கொண்டு உன் கடமையைச் செய்யத் தவருதே!...

அமிருதம்!...கிழவர் அங்கு இந்த அதிசயமான விஷயத்தைக் கேட்டு வியப்புற்று உன் வரவை எதிர்பார்த்திருப்பார். அவருக்கு இன்னும் ஆச்சரியமானதும் கனவிலும் கருதாததுமான இவ் விஷயத்தைத் தெரிவித்து மகிழ்விப்போம். வாருங்கள். தாரா! இனி உன்னிஷ்டப்படி நான் விடமாட்டேன். நான் மாமியார். என் வார்த்தைப்படிதான் நீ நடக்கவேண்டும்" என்று தன் மனத்தைத் திறந்து காட்டிப் பேசிவிட்டாள்.

அமிருததாரை பொழிவதுபோன்ற இம் மொழிகளைக் கேட்ட இருவரும் இதற்குமேல் பேசமாட்டாது தாயாரின் காலில் விழுந்து நமஸ்கரித்து ஊமைப் பதுமைபோல நின்ருர்கள். நீலாம்பிகையின் கண்களில் ஓர் புதிய ஆனந்த ஜோதியுடன் கூடியசோபை பளிச்சென்று எழுந்தது. தாரா

அதற்குமேல் எதுவும் பேசமுடியாது தலை குனிந்து இவர்களுக்கு பவ்யப்பட்டவளாகவே நின்றுவிட்டாள்.

கிழவரின் முன்பு மூவரும் சென்று நின்றதும் அவர் மிகவும் வியப்புடன் சந்தோஷ சாகரத்தில் மூழ்கிவிட்டார். விஷய மறிந்ததும் பின்னும் பூரித்து தம்பதிகளை மனப்பூர்வமான ஆனந்தத்துடன் தடவிக் கொடுத்து ஆசீர்வதித்து தாராவின் இணையற்ற செய்கைக்கு மெச்சினர். கூடிய விரைவிலேயே நல்லதோர் சுப தினத்தில் வெகு விமரிசையாயும் ஆடம்பரமின்றியும் மங்களகரமாகவும் ஆனந்தமாகவும் விவாகம் நடந்தேறியது.

நீலாம்பிகையின் ஆதி காலத்து விசனங்கள் முற்றும் சூரியனைக் கண்ட பனிபோல மறையும்படி, ஓர் கோடி சூர்யன் உதயமாவதுபோல ஓர் பேரப்பிள்ளை ஒரு வருடத்திற்குள்ளேயே உதயமாகிவிட்டது. கிழவருக்கு அபரிமிதமான சந்தோஷ அவுடதம் கிடைத்துவிட்டதால் தள்ளாமை சிறிது நீங்கி தெம்பும், தைரியமும், புதிய நூதன சக்தியும் உண்டாகி பேரப்பிள்ளையுடன் விளையாடிக் களிப்பதும் அதை மடியில் உட்கார வைத்துக்கொண்டு ஸரி கம பத நிஸ... என்ற ஸரளி வரிசையை ஆனந்தமாகச் சொல்லிக்கொடுத்து மகிழ்வதும், அதைக் கண்டு நீலாம்பிகையம்மாள் தன் பழங்கால விசனத்தை மறந்து இதுவே நித்யகல்யாண வைபோக சுகானந்தமாக எண்ணி அபாரமான சந்தோஷத்தை யனுபவித்து வருகிறுள். தம் தாயாரையும் கிழவரையும் சந்தோஷப்படச் செய்யும் இன்பத்தைத் தவிர தம்பதிகளின் களிப்பு வேறு வேண்டுமா! எல்லோரும் இன்புற்றிருக்கவேண்டுவதே என் கடன் என்ற கொள்கையைச் சகல விதத்திலும் அனுஷ்டித்து வருகிறுர்கள்.

போங்கும் மங்களம் எங்கும் தங்குக.

நம் 'மோஹினி' வெளியீடுகளில்

மற்ற நான்கணு நாவல்கள்

மாதவமணி

பணமிருந்தால் பெருமை; அது வரண்டால் சிறுமை என்பதை விளக்கும் சிறு கதை. "பணம், பணம் என்று பறக்காதீர்கள். நல்ல மார்க்கத்தில் நல்ல எண்ணத்துடன் கடவுளே நம்பி இருந்தால், அக்கடவுள் தாமே பணத்தையுங் கொடுத்து நல்ல உயர் பதவியையுங் கொடுத்து ஆதரிப்பார். யாரையும் உதாசீனம் செய்தோ, ஏளனமாகப் பேசியோ மனத்தை நோகவைக்கக்கூடாது. அப்படிச் செய்தால் அது கைம்மேல் பலனைக் கொடுத்துவிடும்."

ஜெயஸஞ்சீவி

தாயாரின் வார்த்தையைக் கேளாது திரிந்த தறிதலே மகன் பின்னர் தாயின் அரிய புத்திமதிகளைக் கேட்டு நடந்த தனுல் பெரும் புகழுக்குப் பாத்திரமானுன். எங்ஙனம் அவன் திருந்தினுன் என்பதைப் படியுங்கள்.

சுகுண பூஷணம்

அற்ப புத்தி ஆபத்தில் புகுத்தும்; ஐயப்பாடு அவதியுறச் செய்யும்; பொறுமை என்றும் பெருமை யளிக்கும்; பக்ஷ பாதம் பழிக்கச் செய்யும்; உண்மைக் காதலே நன்மை பயக்கும்; உத்தம நெறியே உயர்பெற்றேங்கும் முதலிய அருமையான விஷயங்களடங்கிய துப்பறியும் நாவல்.

அன்பின் சிகரம்

பக்திப் பெருக்கும், காதல் ரசமும் நிரம்பியது. உயிரினு மினிய உள்ளன்புடன் செய்த உபகாரத்தின் அருமையை அறியாத அன்பற்ற அலகையின் முடிவு என்ன? படியுங்கள்.

சென்னை ரேடியோ நாடகமேடையில் நடிக்கப்பட்டு, எல்லோராலும் மிகவும் கொண்டாடப்பட்ட சிறு கதை.

உளுத்த இதயம்

இதைப் படிக்கும்போது உங்கள் இதயமும், மனமும், கண்களும் உங்கள் கட்டுக்கடங்கா வென்பது திண்ணம். தான் செய்த குற்றத்துக்காக வருந்துவதே மனிதத்தன்மை என்பதைப் போதிக்கும் அரிய நவீனம்.

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்

எழுதிய 52 நாவல்கள்.

ரூ. 2—8

வைதேகி (2-பாகங்கள்)
ராதாமணி
சாருலோசனு
பத்மசுந்தரன்
காதலின் கனி

ரூ. 2

நவநீதகிருஷ்ணன்
ருக்மிணீகாந்தன்
சாமளநாதன்
தியாகக்கொடி
மங்களபாரதி

ரூ. 1—12

சண்பகவிஜயம்
கௌரீமுகுந்தன்
ஸாரமதி

ரூ. 1—8

சோதனையின் கொடுமை
உணர்ச்சி வெள்ளம்

ரூ. 1—4

பரிமளகேசவன்
உத்தமசீலன்
இன்பஜோதி
ராஜமோஹன்
அனதைப்பெண்
வானக்குயில்
ஜீவியச் சுழல்
கஸ்தூரீதிலகம்
கானல் நீர்
ஆத்மசக்தி

ரூ. 1

சுகந்தபுஷ்பம்
சாந்தகுமாரி
மாயப்ரபஞ்சம்
சந்திரமண்டலம்

அணா 14

கோபாலரத்னம்
புத்தியே புதையல்

அணா 12

கதம்பமாலே

அணா 10

பட்டமோ பட்டம்
மகிழ்ச்சி உதயம்

அணா 8

நளினசேகரன்
வீரவஸந்தா
மூன்று வைரங்கள்
படாடோபத்தின் பரிபவம்
பிச்சைக்காரக் குடும்பம்
ஆனந்தஸாகர்
ப்ரேமப்ரபா
மாலதி
வத்ஸகுமார்
படகோட்டி

அணா 6

பக்ஷமாலிகா

அணா 4

மாதவமணி
ஜெயஸஞ்சீவி
சுகுணபூஷணம்
அம்ருததாரா
அன்பின் சிகரம்
ஸாஸாாஜன்
உளுத்த இதயம்

"ஜகன்மோகினி" ஆபீஸ்,
திருவல்லிக்கேணி, சென்னை.

14-வதாண்டு நடக்கின்றது

ஜகன்மோகினி

ஆசிரியை: வை. மு. கோதைநாயகி அம்மாள்

வருஷ சந்தா ரூ. 1-8-0	நாவல் மாதப் பத்திரிகை	தனிப் பிரதி அணா. 2

ஆங்கில மாதம் முதல் தேதி வெளிவரும்.

எல்லா பத்திரிகை விற்போரிடமும் கிடைக்கும்

இந்த ஆண்டின் முதல் **4** இதழ்களில் **சாந்தகுமாரி** அல்லது **ஜீவிய ரகஸ்யம்** எனும் நாவலும், அடுத்த **4** இதழ்களில் **மாயப்பிரபஞ்சம்** எனும் நாவலும் முடிந்து, **ஸெப்டம்பர்** மாதத்தில் உங்கள் மனத்தை பரவசமுறச் செய்யும் **சந்திரமண்டலம்** அல்லது **அதிர்ஷ்ட மழை** எனும் அற்புதமான நாவல் ஆரம்பமாகி **டிசம்பரில்** முடிந்துவிடும். இந்த **3** நாவல்களும் முடிந்த பின்னர் ரூ. 3-க்கு விற்கப்படுமாதலால் இப்பொழுதே சந்தாதாரர்களாய்ச் சேர்ந்துவிடின், பாதி விலையில் **3** நாவல்களை அடைவதுடன், எமது இதர நாவல்களையும் குறைந்த விலைக்கு வாங்கிக் கொள்ளலாமென்பதைக் கவனியுங்கள்.

ஜீவிய சந்தா நேயர்களுக்கு இனாம்.

ரூ. 25/- அனுப்பினால், நமது சஞ்சிகையைத் தவிர, இனிமேல் நமது ஆசிரியையால் எழுதப்பட்டு நம்மால் பிரசுரிக்கப்படும் எல்லா நாவல்களும் இனாமாக அளிக்கப்படும்.

'ஜகன்மோகினி' ஆபீஸ்,

26, தேரடி வீதி, திருவல்லிக்கேணி, சென்னை.

ஸ்ரீமதி

வை. மு. கோதைநாயகி அம்மாள்

எழுதிய நாவல்கள்.

ரு. 2-8

வைதேகி (2 பாகங்கள்)
ராதாமணி (2 பாகங்கள்)
சாருலோசனா
பத்மசுந்தரன்
காதலின் கனி

ரு. 2

நவநீதகிருஷ்ணன்
ருக்மிணீகாந்தன்
சாமளநாதன்
தியாகக் கொடி
மங்களபாரதி

ரு. 1-12

சண்பகவிஜயம்
கௌரீமுகுந்தன்
ஸாரமதி

ரு. 1-8

சோதனையின் கொடுமை

ரு. 1-4

பரிமள கேசவன்
உத்தமசீலன்
இன்பஜோதி
ராஜமோஹன்
அனாதைப் பெண்

ரு. 1

சுகந்தபுஷ்பம்
கதம்பமாலை
சாந்தகுமாரி
மாயப்ரபஞ்சம்

அணா 14

கோபாலரத்னம்
புத்தியே புதையல்

அணா 10

பட்டமோ பட்டம்

அணா 8

நளினசேகரன்
வீரவஸந்தா
மூன்று வைரங்கள்
படாடோபத்தின் பரிபவம்
பிச்சைக்காரக் குடும்பம்
ஆனந்தஸாகர்
ப்ரேமப்ரபா

அணா 6

பக்ஷமாலிகா

அணா 4

ஜெயஸஞ்சீவி
சுகுணபூஷணம்
அம்ருததாரா
அன்பின் சிகரம்
ஸரஸராஜன்

ரூ. 5/-க்கு மேற்பட்டு ஒரே சமயத்தில் வாங்குபவர்களுக்கு மொத்த விலையில் மூன்றிலொரு பங்கு குறைத்துக் கொடுக்கப் படும். தபாற் செலவுக்காக ரூபாய்க்கு 2 அணா வீதம் (புத்தகத் தின் முழு விலையின்படி) சேர்த்து அனுப்பவேண்டும்.

'ஜகன்மோகினி' ஆபீஸ்,
26, தோடி வீதி, திருவல்லிக்கேணி, சென்னை.